Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★


# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49 மலர் 13
போன் 389 தேசிய தினசரி இதழ் 53

யாழ்ப்பாணம் பங்குனி 21 ஸபர் 7 ஞாயிற்றுக்கிழமை (4-4-71)

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்

# கிழக்குப் பாகிஸ்தானில் வழிகளில் கருகிய சடலங்கள்

## 'தமிழ்க்கட்சி எம். பி.'க்களை ஒன்றுசேர்க்க முயலுவோம்'

யாழ்ப்பாணம், ஞாயிறு தமிழ்க்கட்சி எம். பிக்கள் 16 பேரையும் ஒன்றுசேர்த்து தமிழர்களின் நிலைமை பற்றி ஆராய்ந்து ஏகமனதாக ஒரு முடிவெடுத்து அதனைச் செயல்படுத்துவதற்கு முயற்சிப்போம்.

தமிழர் ஐக்கிய முன்னணி அமைப்பாளர் திரு ஞானமூர்த்தி நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

திரு. ஞானமூர்த்தி மேலும் கூறியதாவது:-

பலநாள் முயற்சி எடுத்து வல்வெட்டித்துறையில் தமிழ்க் கட்சித் தலைவர்களை ஒன்றுசேர்த்தோம். அந்த முயற்சியைத் தொடர்ந்து செய்வோம்.

தமிழ்த்தலைவர்கள் ஒன்றுபட வேண்டுமென்பதே தமிழ்மக்களின் விருப்பமாகும். தமிழ்க்கட்சி எம், பிக்களை ஒன்றுசேர்த்து தமிழர்களின் உரிமைகள் பற்றிய விஷயத்தில் ஒன்றுபட்டு உழைக்குமாறு கோருவோம்.

அடுத்த வாரம் தமிழர் ஐக்கியமுன்னணி கமிட்டி கூடி இதுபற்றி ஆராயவிருக்கிறது.

## மசூதியில் ரத்தக்கறை

புதுடில்லி, ஏப்பிரல் 3 பாகிஸ்தான் விமானங்கள் கிழக்குவங்காளப்பகுதிகளில் மீண்டும் குண்டு வீசித்தாக்கியதாக இந்தியவானொலி அறிவித்தது

கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள குஷ்டியா ஜில்லாவில் பாகிஸ்தான் ஜெட்விமானமொன்று பிற்பகல் 2 மணியளவில் குண்டுவீசித்தாக்கியதாக இந்தியவானொலி அறிவித்தது. இந்தவிமானம் குண்டுவீசுவதற்கு முன்பாக இன்னொருவிமான வேவு பார்த்ததாகவும், இதனால் அப்பகுதியிலுள்ள மக்கள் முன்னெச்சரிக்கைஅடைந்து இக்குண்டு வீச்சிலிருந்து தப்பியதாகவும் மேலும் தெரிவித்தது குஷ்டியாஜில்லா முஜிபுர் ஆதரவுப்படைகளிடமேஇப்பொழுது இருக்கிறதாம்

இன்னொரு பகுதியில் பாசறையிலிருந்து வெளிப்பட்ட பாகிஸ்தானியத் துருப்புக்கள் பீரங்கித்தாக்குதல் தொடுத்ததில் பலர் கொல்லப்பட்டதாகவும், தாம் வந்தபாதைகள் முழுவதும் எரிந்து சாம்பலாகிய பிரேதங்கள் காணப்பட்டதாகவும் உட்பகுதிக்கு ரகசியமாகச் சென்றுவந்த நிருபர் ஒருவர் தெரிவித்துள்ளார்

அங்குள்ள மசூதிச் சுவரில் ரத்தக்கறைகள் காணப்பட்டதாகவும் அந்நிருபர் மேலும் தெரிவித்தார்.

### முஸ்லீம் அறிஞர்கள் கண்டனம்

இந்தியாவிலுள்ள ஆறு பிரபல முஸ்லீம் அறிஞர்கள் கிழக்குவங்காள அப்பாவி மக்கள் மீது மேற்குபாகிஸ்தான் இராணுவம் கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளதை கண்டித்துள்ளனர்.

---

### மசானி ராஜினாமா

புதுடில்லி, ஏப். 3 இந்திய சுதந்திரக்கட்சித் தலைவர் எம், ஆர், மசானி தனது தலைமைப்பதவியிலிருந்து ராஜினமாச் செய்துள்ளார்.

தனது ராஜினமாக்கடிதத்தை சுதந்திரக்கட்சியின் பொதுக்காரியதரிசிக்கு அனுப்பிவைத்துள்ளார் அந்தக்கடிதத்தில் அண்மையில் நடந்த இந்தியபொதுத் தேர்தலில் சுதந்திரக்கட்சியின்படுதோல்விக்குத்தானே முழுக்காரணம் என்பதினால் இப்பதவியைச் ராஜினமாச் செய்வதாகவும் சாதாரண உறுப்பினராக இருந்து சுதந்திராக்கட்சியின் கொள்கைகளைப்பரப்பப் பாடுபடப் போவதாகவும்தெரிவித்துள்ளார்.

---

### வடபகுதி அசைஸ் விசாரணை

## சேமமடு கொலை வழக்கு: எதிரிகள் விடுதலை

யாழ்ப்பாணம், சனி சேமமடு கொலை வழக்கில் எதிரிகள் இருவரும் நேற்று விடுதலை செய்யப்பட்டனர். ஜூரி சபையினர் 6-1 ஆக பிரிந்து எதிரிகள் சுற்றவாளிகளாக வெளத் தெரிவித்ததை தொடர்ந்து நீதியரசர் தீர்ப்பு வழங்கினார்.

இவ் வழக்கில், 1969ம் ஆண்டு, மே மாதம் 15ம் தேதி, சேமமடுவில் ரி. காசிப்பிள்ளை என்பவரை, யோகராசா, நடராசா ஆகிய இருவரும் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

இவ் வழக்கு வடப கு. தி அசைஸ் கோர்ட்டில் நீதியரசர் வீரமந்திரி முன்னிலையில் நடந்த 5 தினங்களாக விசாரணை செய்யப்பட்டு நேற்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

எதிரிகள் சார்பில், அட்வகேட் கே வி எஸ் சண்முகநாதன், அட்வகேட் சி ஆறுமுகத்தின் உதவியுடனும், புறக்டர்களான வி ஏ ஈ. பாலசிங்கம், ஏ பூபாலன், ஆர் சிவகணேசன், வி. யோகேஸ்வரன் ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். எதிரிகளுக்காக அரசாங்கத்தால் புறக்டர் ஏ. குலநாயகம் நியமிக்கப்பட்டிருந்தார். முடிக்குரிய தரப்பில் அட்வகேட் சந்திரசேகரா ஆஜரானார்.

அசைஸ் விசாரணை இன்று காலை வரை ஒத்திபோடப்பட்டுள்ளது.

### பாக் வர்த்தகக்கப்பலுக்கு தொல்லை

## பாக் குற்றச்சாட்டுக்கு இந்தியா மறுப்பு

பாரதக்கரையோரப்பகுதியால் சென்றுகொண்டிருந்த பாகிஸ்தான் வர்த்தகக் கப்பல் ஒன்றை 4இந்தியபோர்க் கப்பல் சூழ்ந்து தொல்லைகள் விளைவித்ததாக பாகிஸ்தான் சாட்டிய குற்றச்சாட்டை இந்தியா மறுத்துள்ளது. இவ்விதமான பொய்க் குற்றச் சாட்டுக்கள் ஆதாரமற்றவை மட்டுமல்ல, விஷமத்தனமானதுங்கூட என்று புதுடில்லியில் அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## விஷமிகள் தொல்லை வீடுகளில் பாக் கொடிகள்

### மசூதிகளில் தொழுகை

கிழக்கு வங்காளத்தின் எல்லையோரங்களிலுள்ள இந்திய அதிகாரிகள் கிழக்குப் பாகிஸ்தானிலுள்ளவிஷமிகளுக்கு ஆயுதங்கள் வெடிப் பொருட்கள்மற்றும் யுத்த தளவாடங்களைக் கொடுத்து வருவதாக பாக் வானொலிச் செய்தி ஒன்று தெரிவித்தது.

மேலும் அச்செய்தியில் அகதிகளுக்குஉதவி அளிப்பதுபோல இவ்வுதவி அளிக்கப்படுவதாகவும், எல்லையோரப்பகுதியான சில்கட் பகுதியிலுள்ள இந்திய அதிகாரிகள் பெருந்தொகைப் பணத்தை அவர்களுக்குக் கொடுப்பதாகவும் தெரிவித்தது,

கிழக்குப் பாகிஸ்தானிலுள்ள நாசகாரவேலைகளில் ஈடுபட்ட விஷமிகள் அங்கு வாழும் பொதுமக்களுக்குத் துன்பம் விளைவித்து வருவதாகவும், அப்படிப்பட்ட நபர்களை இராணுவ அதிகாரிகள் பெருந்தொகையில் கைது செய்துள்ளதாகவும் தெரிவித்த அவ்வானொலி இன்று பெருந்தொகையான மக்கள் பள்ளி வாசலில் ஜும்மா தொழுகை செய்தனர்என்றும் அங்குள்ள வீட்டுக் கூரைகளில்பாகிஸ்தான் தேசியக் கொடிகள் பறக்க விடப்பட்டிருந்ததாகவும் தெரிவித்தது.

---

### இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய 14-ம் திருவிழா இன்று நடைபெறும் "சிவலிங்கசாட்சி" எனும் பொருள்பற்றிய பிரசங்கமும் இன்னிசைக் கச்சேரியும் இடம்பெறவுள்ளன.

## ஸ்ரீ சிவபாலயோகியாரை தரிசிக்க மக்கள் குழுமினர்

— கு. வி. மகாலிங்கம் —

யாழ்ப்பாணம், ஞாயிறு சிவபாலயோகி மகராஜ் அவர்கள் யாழ். திவ்விய ஜீவன சங்கச்சார்பில் வடபகுதிக்கு விஜயஞ்செய்துள்ளார்.

ஏராளமான மக்கள்வந்து அன்னாரைத்தரிசனம்செய்து சென்றனர். வடபகுதியின் பலபாகங்களிலிருந்தும்வாகனங்களில் பலர்வருகைதந்தமையால் திவ்வியஜீவன சங்கமண்டபத்துக்கு முன்னர் வாகனங்களாகவே காட்சிதந்தன.

மௌனத்தின் மூலமேஇறை தரிசனஉண்மையை விளக்கும் யோகியாரை இலங்கைக்குவரவழைத்த வரவேற்புக்குழுவின் இணைக்காரியதரிசியான திரு ஆர். கே. முருகேசுவிடம் யோகியார் பற்றி விசாரிக்கையில் அவர்தெரிவித்தவை.

"தன்னிலை மறந்து தியானம்செய்துவரு[illegible]

இந்தியாவில் சென்றவிடத்து அவரைத்தரிசிக்கும் பாக்கியம் எனக்குக்கிடைத்தது. ஈழத்துக்கும் விஜயஞ்செய்ய வேண்டுமென அவரிடம் வேண்டினேன் அதன் பயனாகவே அவர் வடபகுதிக்கும் எழுந்தருளித் திருவருள் பாலித்தது.

நாஸ்திகம் பேசுபவர்கள் யோகியாரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்தால் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'அந்த அரசு செய்ய தவறியதை இதுவும் செய்யவில்லை'

பருத்தித்துறை, சனி

'சென்ற அரசாங்கத்திடம் பெற முடியாததை இன்றைய அரசாங்கம் செய்யுமென எதிர்பார்ப்பதிலும் அர்த்தமில்லாத சங்கதியாகிவிட்டது. கடந்த அரசாங்கம் தொழிற்சங்க ரீதியாக இயங்கிவந்த சில தனியார் பாடசாலை ஆசிரியரை வேலை நீக்கம் செய்தது. ஆனால் இன்றைய அரசாங்கத்துக்குப்பல ஆசிரியர்தொழிற்சங்கங்கள் இதுபற்றிக் கூறியும் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கவில்லை.

இவ்வாறு ஸ்ரீ லங்கா ஜாதிக குருசங்க யாழ். கிளைச் செயலாளர் திரு. எம். குமாரசாமி, யாழ். புனித சான்ஸ் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற யாழ். நகரக்கிளை அங்குரார்ப்பணக் கூட்டத்திற் கூறினார். தலைவர்: திரு. வ. கிருஷ்ணபிள்ளை தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் நூற்றுக்கணக்கான ஆசிரியர் பிரதிநிதிகள் சமுகமளித்திருந்தனர்.

திருவாளர்கள்: பி. கனகரத்தினம், எஸ். சண்முகரதினம், பி. ஜோன்பிள்ளை ஆகியோரும் பேசினர்.

## வரி விளம்பரம்

### கல்வி

19-3-71 தொடக்கம் மானிப்பாய் மகளிர் கல்லூரியில் க. பொ. த, ப. உயர்தர (விஞ்ஞானப்பகுதி) வகுப்புகள் நடைபெறுகின்றன. சில வெற்றிடங்களே உண்டாகையால் சேரவிரும்பும் தகைமைபெற்ற மாணவிகள் 1-5-71-ந் திகதிக்கு முன்னதாக அதிபருக்கு விண்ணப்பிக்கவும். 2747


REGAL - Jaffna
Daily 4-45, 7& 9-45 p m
Poya days 4 Shows
Birth Lanchaster
in
GIPSY MOTHS

ராணி
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி கணேசன்
கே. ஆர். விஜயா
நடித்த
ராமன் எத்தனை ராமனடி

வின்ஸர் - யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ மாஸ்ரர் பிரபாகர்
★ பேபி சுமதி ★ லட்சுமி
மனோரமா, வி.எஸ்.ராகவன், சுருளிராஜன்
சீர்காழி கோவிந்தராஜன்
நடிக்கும்
வா ராஜா வா
(ஈஸ்ட்மன் கலர்)

வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள் போயா நாட்கள் 4 காட்சி
எம்.ஜி.ஆர். (இருவேடங்களில்)
சரோஜாதேவி
ரத்னா
நடித்த
எங்க வீட்டுப்பிள்ளை

இன்னும் சில தினங்கள் மட்டும்
கெப்பிட்டல்
(கொழும்பு)
சிவாஜி காஞ்சனா
நடித்த
சிவந்த மண்

7-ம் திகதி முதல்
சினிமாஸ் திரைகளில்
ரவிச்சந்திரன்-ஜெயலலிதா
நடித்த
மூன்றெழுத்து
(கலர்ப்படம்)


## வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம்

111, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

மேற்படி சமாசத்தினால் கீழ்க் குறிக்கப்படும் வெற்றிடங்களுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பெற்றோல் விற்பனவு நிலைய முகாமையாளர்கள்

தகைமைகள்

(அ) வயது: 25 வயதிற்கும் 50 வயதிற்கும் உட்பட்டவராகவும்.

(ஆ) கல்வி: க. பொ. த. (சாதாரணதர) பரீட்சையில் சித்தி.

அல்லது

ஜே. எஸ். சி. தராதரப் பத்திரத்துடன் பெற்றோல் விற்பனவு நிலைய முகாமையாளராக குறைந்தது ஐந்து வருட அனுபவம்.

(இ) வேதனம்:
ரூபா. 250/- — 350/-

10 X 10

எல்லாப்படிகளும் உட்பட.

(ஈ) பிணை: ஆதனப்பிணை ரூபா. 10,000/-
ரொக்கப்பிணை ரூபா 2500/-

2. விற்பனையாளர்கள்

தகைமைகள்

(அ) வயது: 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்டவராகவும்.

(ஆ) கல்வி: ஜே. எஸ். சி பரீட்சையில் சித்தி

(இ) வேதனம்:
ரூபா. 125/- — 200/-

15 X 5

(ஈ) பிணை: ரொக்கப்பிணை ரூபா. 250/-

3. இராக்காவலாளர்:

தகைமைகள்:

(அ) வயது: 25 வயதிற்கும் 55 வயதிற்கும் உட்பட்டவராகவும்.

(ஆ) கல்வி: 7-ம் வகுப்பில் சித்தி.

(இ) அனுபவம்: பொலிஸ் அல்லது இராணுவ ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் விரும்பத்தக்கது.

(ஈ) வேதனம்: எல்லாப் படிகளும் உட்பட ரூபா 125/-

(உ) பிணை: ரொக்கப்பிணை ரூபா 500/-

விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் 12-4-71 மத்தியானம் 12 மணிக்கு முன்னர் தலைவர், வடபகுதி விவசாய உற்பத்தியாளர் கூட்டுறவுச் சமாசம், 111, பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்படுதல்வேண்டும். 3230


நாகம்ஸ் சினிமா
கன்னாகம்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
எம்.ஜி.ஆர்.-ஜெயலலிதா
நடித்த
புதிய பூமி

வெஸ்லி சினிமா
மானிப்பாய்
தினசரி 2-30, 6-30,
ராஜன் - சௌகார் ஜானகி
நடித்த
துணைவன்
தினசரி இரவு 10-00
எம்.ஜி.ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
சர்வாதிகாரி

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
ராஜேந்திரகுமார்-சாய்ராபானு
நடித்த
யுக்காயா
ஆஸ்மான்
(ஹிந்தி)


# விவசாய அமைச்சர் 8-ம் திகதி யாழ். விஜயம்

மாவிட்டபுரம், சனி

விவசாயத்துறை அமைச்சர் திரு கொப்பேகடுவ இம்மாதம் 8ம் திகதி வட பகுதிக்கு விஜயம் செய்ய விருக்கிறார்.

3 நாள் விஜயத்தை மேற்கொண்டு வடபகுதிக்கு வரும் இவர் வடக்கில் விவசாய முன்னேற்றம் பற்றி ஆராய்வார். 8ம் திகதி காலை 8.30 மணிக்கு பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கும் அமைச்சர் பின்பு நாக விகாரைக்கும், நல்லூர் கந்தசாமி கோவிலுக்கும் சென்று பின் 10 மணிக்கு யாழ் அரசாங்க செயலகத்தில் நிகழும் விவசாய உப குழுக்கூட்டத்தில் கலந்து கொள்வார். இதையடுத்து நிலாவரைக் கிணற்றையும் தொண்டமனாறு நன்னீர்த் திட்டத்தையும் 9ம் திகதி கிளிநொச்சி... விசுவமடு, இரணைமடு, பரந்தன் நெற் திட்டம்; பண்ணை நெற்குளம் மிருசுவில் பெண்கள் குடியேற்ற திட்டம் ஆகியன உட்பட மற்றும் விவசாய அபிவிருத்தித் திட்டங்களையும் அமைச்சர் பார்வையிடுவார்.

10ம் திகதி காரைநகர் நோர்வே திட்டத்தையும் பார்வையிட்டபின் தோலகட்டி, திருநெல்வேலி விவசாயப் பண்ணைகளையும் பார்வையிடுவார்.

# கீரிமலையில் பனம் பொருள் உற்பத்தி நிலையம்

மாவிட்டபுரம், சனி

கீரிமலையில் பனம்பொருள் உற்பத்தி நிலையம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கீரிமலை கருகம்பானை குடியேற்றத் திட்டத்தில் கைத்தொழில் அபிவிருத்தி சபையால் இந்த பனம் பொருள் உற்பத்தி நிலையம் சுமார் 13 ஆயிரம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வருகிறது

முடிக்குரிய காணியில் அமைக்கப்பட்ட இந்நிலையத்தின் வேலைகள் பூர்த்தியானதும் பனங்கருப்பணியில் இருந்து சீனி, ஜாம், பனங்கட்டி ஆகியவற்றைத் தயாரிக்கவேண்டிய உபகரணங்கள் வழங்கப்படவிருக்கிறது.

நேற்று முன்தினம் இந்நிலயத்தை யாழ். அரசாங்க அதிபர் திரு. விமல் அமரசேகரா உத்தியோகபூர்வமான முறையில் சம்பிரதாய முறைப்படி பால் காய்ச்சி திறந்துவைத்தார். வலி-வடக்கு காரியாதிகாரி திரு பி. எல். பற்றிக்ஸ், கிராமசேவையாளர்கள் கலந்துகொண்டனர்.

கிராம விஸ்தரிப்பு அபிவிருத்தி திட்டத்தின் கீழ் அமைக்கப்படும் இந்நிலயத்தை கைத்தொழில் அபிவிருத்தி சபை உறுப்பினர் ஹெக்டர் அபயகுணவர்த்தனவும் பார்வையிட்டார்.

---

பாடசாலைகள்

## விடுமுறை 7-ந் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

பாடசாலைகளின் முதலாம் தவணை விடுமுறை இம்மாதம் 7-ந்திகதி ஆரம்பமாகி அடுத்தமாதம் 2-ந்திகதியுடன் முடிவடைகின்றது.

இரண்டாம் தவணை 3ம் திகதி ஆரம்பமாகும்.


ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30, 9-30
போயா நாட்கள் 2-30
ராஜன்-புஷ்பலதா
நடித்த
கற்பூரம்

மனோகரா
(யாழ்ப்பாணம்)
Daily 10-30am & 4' 15.p.m.
Spell Binding Suspence
Thriller
BANDITS in ROME
6-30, 10-00 மணி
சிவாஜி கணேசன்
சௌகார்ஜானகி
நடித்த
லக்ஷ்மி
கல்யாணம்
(புத்தம் புதிய கொப்பி)


# வேலணைச் செய்திகள்

### 'ஜே. பி, யாக நியமிக்கவும்'

வேலணை, சனி

வேலணையைச் சேர் சேர்ந்த ஆசிரியர் திரு. சி. இராசரத்தினம் சமாதான நீதவானாக அரசாங்கம் நியமிக்க வேண்டுமெனகோரும் தீர்மானம் நடந்து முடிந்த வேலணைக்கிராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது

இங்குஆயுள்வேத வைத்தியத்துறையில் பிரபலம் பெற்று விளங்கும் இவர் வேலணை சனசமூகநிலையங்களின் சமாசத் தலைவராகவும் தீவுப்பகுதி ஆசிரியர் சங்க உபதலைவராகவும் ஐக்கிய பண்டகசாலைத் தலைவராகவும் மற்றும் பொது ஸ்தாபனங்களில் முக்கியஸ்தராகவும் இருந்து வருகிறார். இவரை ஜே. பி. ஆக நியமிக்குமாறு வேலணையிலுள்ள ச. ச. நிலையங்களும் மற்றும் பொதுஸ்தாபனங்களும் சம்பந்தப்பட்ட அமைச்சருக்கு மகஜர்கள் அனுப்பி வைத்துள்ளன,

### வீதிச் சீர்கேடு

வேலணை வங்களாவடியிலிருந்து மண்கும்பான் ஊடாகச் செல்லும் வீதி திருத்தப்படாது பல வருடங்களாகக் கவனிப்பாரற்றுக் கிடப்பது குறித்து இப்பகுதி மக்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர். ஏற்கனவே இதுபற்றி சம்பந்தப் பட்டவர்களுடன் வேலணை கி. மு. சங்கம் தொடர்பு கொண்டும் எவ்வித பலனும் ஏற்படவில்லை. இவ்வீதி திருத்தப்படாததால் போக்குவரத்துக் கஷ்டத்தை அனுபவிப்பதுடன் இ போ சவுடன் தொடர்பு கொண்டு பஸ் சேவையை நடத்தும்படி கோரவும் முடியாத நிலையில் இப்பகுதி மக்கள் இருக்கின்றனர். இதுபற்றி இத்தொகுதி எம். பியிடம் முறையிட்டுள்ளனர்.

### உற்பத்தியாளர் கவலை

வேலணைப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட மிளகாயை இப்பகுதிச் சங்கங்கள் கொள்முதல் செய்யாததனால் இங்கிருந்து யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்குக் கொண்டு சென்று விற்க வேண்டியிருப்பதாக கமக்காரர்கள் கவலை தெரிவிக்கின்றனர். இதனால் விலை வீழ்ச்சியும் வீண் செலவும் ஏற்படுவதாகக் கூறுகின்றனர்.

இதுபற்றி இத்தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு கா பொ இரத்தினத்திடம் முறையிட்டதை அடுத்து சம்பந்தப்பட்டவர்களுடன் எம் பி தந்திமூலம் தொடர்பு கொண்டுள்ளார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு பாக். எச்சரிக்கை

# தலையிட்டால் மோசமான விளைவுகள் ஏற்படுமாம்

## கி. பாக். நிலைமை குறித்து அமெரிக்க அரசும் கவலை

புதுடில்லி, ஏப். 3

**பாகிஸ்தான் விவகாரங்களில் இந்தியா தலையிடுமானால் மோசமான விளைவுகள் ஏற்படுமென பாகிஸ்தான் அரசாங்கம் இந்திய அரசுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.**

கிழக்குப் பாகிஸ்தான் விவகாரங்களில் இந்திய அரசு தலையிட்டிருப்பதாகவும் இந்தியப் பிரஜைகள் கிழக்குப் பாகிஸ்தானுக்குள் ஊடுருவுவதற்கு ஊக்கமளிப்பதாகவும் ஆயுதங்கள் வழங்குவதாகவும் பாகிஸ்தான் மீண்டும் குற்றஞ்சாட்டியிருக்கின்றது.

பாகிஸ்தானிலுள்ள இந்திய தூதுவர் வெளிநாட்டமைச்சின் காரியாலயத்துக்கு அழைக்கப்பட்டு இந்த எச்சரிக்கை அவரிடம் தெரிவிக்கப்பட்டது.

இந்தியா பாகிஸ்தான் விவகாரங்களில் தலையிடுவதாக ஏற்கனவே பாகிஸ்தான் தெரிவித்த குற்றச்சாட்டுக்களை இந்திய அரசாங்கம் மறுத்துள்ளது.

கிழக்குப்பாகிஸ்தான் விவகாரங்களில் இந்தியா தலையிடுவதாகவும், அங்கு நடைபெறும் சம்பவங்கள் முற்றிலும் உள்நாட்டு விவகாரம் என்றும் பாகிஸ்தான் வானொலி மீண்டும் செய்தி ஒலிபரப்பியது.

இதே சமயம் நேற்று இரவு இந்திய எல்லைக்கு அப்பாலிருந்து கிடைத்த செய்திகளின்படி பாகிஸ்தான் ராணுவ விமானங்கள் சுமார் 12 கிழக்குப்பாகிஸ்தான் நகரங்கள மீது குண்டு வீசித் தாக்கியிருப்பதாக அகில இந்திய வானொலி செய்திகூறியது.

குல்னு. கொமில்லா, சிட்டகாங் ஆகிய நகரங்களும் இவ்வித விமானத்தாக்குதலுக்குள்ளாகினவாம் ராஜ்சாகியில் தொடர்ந்து சண்டை நடைபெறுகின்றதாம். ஜெசூரில் ராணுவத்தினர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் ஆதரவுபடையினரால் மடக்கப் பட்டுள்ளார்களாம் அங்குள்ள ராணுவகன்டோன்மன்டை விடுதலைப் படைகள் முற்றுகையிட்டுள்ளார்கள். ராணுவத்தினருக்கு உதவுவதற்கு விமானங்கள் மூலம் எடுக்கப்பட்ட முயற்சியை கிராமவாசிகள் முறியடித்தார்கள்.

இந்த நகரில் ராணுவத்தினர் முதலில் உள்ளூர் அவாமிலீக் தலைவர்களைக் கைது செய்துவிட்டு நகரைத் தம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர முயற்சி செய்தனர். ஆனால் கிராமவாசிகள் ஆயிரக்கணக்கில் அங்கு வந்து ராணுவத்தினரை அடித்துத்துரத்தினார்களாம்.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்துதிரும்பிச்சென்றுள்ள பி. பி. ஸி. நிருபர் ஒருவர் அங்கு தாம் நேரில்கண்ட சம்பவங்களை விவரித்திருக்கிறார்.

ஜெசூர் நகரில் ராணுவத்தை முஜிபுரின்படையினர் மூர்க்கமாக எதிர்த்து நின்றார்களாம் படையினர் பெண்களை குழந்தைகள் உட்படஏராளமான பொதுமக்களைக் கொன்று குவித்தார்களாம். இங்கு விடுதலைப்படைகளுடன் கிழக்கு பாகிஸ்தான் துப்பாக்கிப் படையினரும் சேர்ந்துகொண்டு சண்டையில் ஈடுபட்டதாகவும் தெரிகின்றது.

டாக்காவிலிருந்து விமான நிலையத்துக்குச் செல்லும் பாதை ஒரே மரணக்காடாக கிடப்பதாக ஒரு பிரயாணி கூறியிருக்கிறார். பாகிஸ்தான் எண்ணெய்க் கம்பனியொன்றைச் சேர்ந்த ஓர் ஊழியர் நான்கு நாட்களாக நடந்து இந்திய எல்லைக்குள் புகுந்துள்ளார். தாம் வந்தவழிகள் முழுவதும் ஏராளமான பிணங்களைக் கண்டதாகவும் அவர் கூறினார்.

கொமில்லாநகரிலும் மாத்திரம் 2600 பேர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று முன்னர் வந்த செய்திகள்கூறின.

நேற்று சுமார் 100 பிரிட்டிஷ் பிரஜைகள் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து சிங்கப்பூருக்கு அப்புறப்படுத்தப்பட்டனர். இவர்களில் பலரும் எந்தத் தகவலையும் வெளியிடமறுத்துவிட்டார்களாம் தகவல் எதையும் வெளியிடக்கூடாதெனஇவர்கள் துப்பாக்கிமுனையில் எச்சரிக்கப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

அமெரிக்க பிரஜைகளை கிழக்கு பாகிஸ்தானிலிருந்து அப்புறப்படுத்துவதற்கு பாகிஸ்தான் அரசு தனது விமானங்களை கொடுத்துதவ முன்வந்ததை அமெரிக்கா ஏற்றுக்கொண்டுள்ளது.

### அமெரிக்கா கவலை

பாகிஸ்தானில் ஏராளமான மக்கள் உயிர்துறக்க நேர்ந்துள்ளது பற்றியும் பொதுமக்கள் பெரும் கஷ்டங்களுக்குள்ளாக நேர்ந்துள்ளது குறித்தும் பாகிஸ்தான் அரசாங்கம் கவலை தெரிவித்துள்ளது. அதேசமயம் அங்கு நடைபெறும்சம்பவங்கள் முற்றிலும் உள்நாட்டு விவகாரமாகவே அமெரிக்கா கருதுவதாக அதிகாரி ஒருவர் தெரிவித்திருக்கிறார்.

கிழக்குபாகிஸ்தானிலுள்ள ஐ. நா. பிரதிநிதிகளை அப்புறப்படுத்துவதற்குபொதுச்செயலர்ளர் யுதாண்ட நடவடிக்கை எடுத்துவருகிறார்,

### சோஷலிஸ கட்சிகள் கோரிக்கை

உலகம் முழு[illegible] 54 சோஷலிசக் கட்சிகளைக் கொண்ட சோஷலிச உலக இயக்கம் கிழக்குப்பாகிஸ்தான் நிலைமையில் தலையிட்டு நடவடிக்கை எடுக்கும்படி ஐ நா. பொதுச்செயலாளரைக் கேட்டிருக்கின்றது.

கிழக்குப் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நிலைமைகாரணமாக அங்குள்ள பௌத்தர்கள் எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லையென்று கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் அறிவித்திருக்கின்றது.

......

### இலங்கைவரும் ஜெர்மன்குழு

பருத்தித்துறை, சனி

ஆனிமாத இறுதிப்பகுதியில் மேற்குஜெர்மன் உதைபந்தாட்டக்குழு இலங்கை வருவதாகவும், இங்குள்ள பிரதான மாகாணநகரங்களிலுள்ள கோஷ்டிகளுடன் இது மோதவிருப்பதாகவும். இலங்கை உதைபந்தாட்டச் சங்கச்செயலாளர் திரு வி கே ஆறுமுகம் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

### புதிய எண்ணெய் ஒப்பந்தம்

ட்ரிப்போலி, ஏப். 3

மேற்கத்திய எண்ணெய்க் கம்பனிகள் லிபியா வுடன் புதிய எண்ணெய் கொள்வனவு ஒப்பந்தம் ஒன்றை செய்துகொண்டுள்ளன. இந்த ஒப்பந்தத்தின் மூலம் லிபியா எண்ணெய்க்கு அதிக விலை கிடைக்கும் என்றும், அந்த நாட்டின் வருமானம் அதிகரிக்கும் என்றும் கூறப்பட்டது.

......

### நவீன சந்தை

அம்பன், சனி

நாகர்கோயிலில் அமைக்கப்பட்டுவரும் நவீன சந்தைக்கான கட்டிடவேலைகள் யாவும் பூர்த்தியடைந்து விட்டன. திறப்புவிழா அடுத்தமாதமுற்பகுதியில் நடைபெறும்.

### புனரமைப்பு

அம்பன். சனி

பிறப்பு. இறப்பு, விவாகப் பதிவு காரியஸ்தர்கள் பிரிவுகள் புனரமைப்புச் செய்யப்பட விருக்கின்றது.

இதன் காரணமாக இவ்வாண்டு ஜனவரி முதல் பங்குனி மாதம் வரையிலும் ஒவ்வோர் கிராம சேவையாளர் பிரிவிலிருந்தும் பதிவு காரியஸ்தர்களுக்கு கிடைத்த பிறப்பு இறப்பு விகிதத்தை 7 நாட்களுக்குள் அறிவிக்கும் படி யாழ் மாட்ட பெரும் பகுதிபதிவுக்காரியஸ்தர் பதிவு காரியஸ்தர்களுற்கு சுற்றுநிருபமூலம் தெரிவித்துள்ளார்.

### ராஜினமா

அம்பன், சனி

குடத்தனைக் கிராமசபையின் 8-ம் வட்டார உறுப்பினர் திரு. தில்லைநாதர் சந்திரசேகரம் தனது பதவி துறப்புக் கடிதத்தை யாழ். மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

ஜோர்டானில்

## கொமாண்டோக்கள் தனி அரசு அமைப்பர்?

அம்மான், ஏப். 3

ஜோர்டானிலுள்ள பாலஸ்தீனகொமாண்டோக்கள் தனி அரசு ஒன்றை அமைத்துக் கொள்ளப் போவதாக அவர்களின் வானொலி அறிவித்திருக்கிறது.

ஜோர்டான் அரசாங்கப் படைகளுக்கும் பாலஸ்தீன கொமாண்டோக்களுக்குமிடையில் கடந்த சில தினங்களாக நடைபெற்றுவரும் மோதல்களைத் தொடர்ந்து இந்த அறிவித்தலை கொமாண்டோக்களின் வானொலி அறிவித்தது. இந்த அறிவித்தல் பற்றி ஜோர்டான் அரசு எதுவித அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை.

எந்த அரசுடனும் தாங்கள் பேச்சுக்கள் நடத்தப் போவதில்லையென்றும் எவருடனும் ஒப்பந்தம் செய்யப் போவதில்லை யென்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# ‘நேட்டோ’ ஒழிக்கப்பட்டால் ‘வார்ஸா’ அமைப்புகலைக்கப்படும்

## சோவியத் கம். செயலாளர் அறிவிப்பு

மாஸ்கோ, ஏப். 3

‘சோவியத் யூனியன் சமாதானத்தையும் சர்வதேச பந்தோபஸ்தையும் தவருது பேணி வருகிறது. ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கையை எதிர்த்து போராடி வருகிறது’.

இங்கு ஆரம்பமான சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மகாநாட்டில் உரையாற்றிய பொதுச் செயலாளர் லியோனிட் பிரெஷ்னேவ் ஆயிரக்கணக்கான உள்நாட்டு சர்வதேச பிரதிநிதிகள் மத்தியில் பேசுகையில் கூறினார்.

‘எமது கட்சியின் குறிக்கோள் பிரபல்யமானது; யாவருமறிவர். ஏனைய சோஷலிஸ, சமாதானம் விழையும் நாடுகளுடன் இணைந்து இந்த லட்சியங்களுக்காக போர்க்கொடி உயர்த்தியிருக்கிறோம்’ என்று மேலும் கூறினார்.

தென்கிழக்காசியாவிலும், மத்திய கிழக்கிலும் போர் [illegible] ந்து மக்களினதும் ராஜ்யங்களினதும் சட்டபூர்வமான உரிமையை பெறுவது என்ற அடிப்படையில் சோவியத் கொள்கை செயற்பட்டு வந்துள்ளது என்று அவர் கூறினார்.

தகராறுகளுக்கு பலாத்காரம் மூலம் தீர்வுகாணும் மார்க்கத்தை விட்டுவிடுவது சர்வதேச நியதிகளாக வேண்டும் என்று அவர் கூறினார். இதை நடைமுறையில் நிலைநாட்ட உகந்த இருதரப்பு உடன்படிக்கைகளை செய்ய நாடுகளுக்கு அறைகூவல் விடுத்தார்.

போரை ஒழிக்கவும், நாசகார ஆயுதங்களை தடை செய்யவும் சோவியத் யூனியன் தயார். அதற்காக நேட்டோ ராணுவ அமைப்பு கலைக்கப்பட்டால் வார்ஸா அமைப்பை கலைக்க தயாரென்றுப் பிரகடனம் செய்தார்.

அணு சூன்ய பிராந்தியங்களை ஸ்தாபிப்பதற்கும் சோவியத் யூனியனின் ஆதரவு உண்டென்று கூறினர் அந்நிய நாடுகளில் ராணுவத்தளங்களை அழித்தொழிப்பதற்கு சோவியத் யூனியனின் ஆதரவை தெரிவித்தார்.

முன்னர் போலவே இன்னும் தேசிய விடுதலைக்காக போராடும் மக்களுக்கு சோவியத் யூனியன் தடம்புரளாது தங்கு தடையற்ற உதவி வழங்குகிறது என்று பிரெஷ்னேவ் கூறினர்.

### சுதந்திரம் வேண்டும்

இந்தக் கூட்டத்தில் இத்தாலிய கம்யூனிஸ்ட்கட்சிப் பிரதிநிதி ஒன்றிக்கோ பேர்லிங்கர் பேசுகையில் ஒவ்வொரு நாட்டிலும் இயங்கும் கம்யூனிஸ்ட் கட்சிகள் ஒவ்வொன்றுக்கும் பூரண சுதந்திரம் வழங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தினர்

செக்கோஸ்லவாக்கியகம்யூனிஸ்ட்கட்சித்தலைவர் திரு. குஸ்டாவ் ஹுஸாக்பேசும் போது எதிர்ப்புரட்சியொன்றிலிருந்து தமது நாட்டைக் காப்பாற்றியமைக்காகசோவியத்யூனியனுக்கு நன்றி தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

நமது உள்ள உணர்ச்சிகள் நெருப்பையும் தண்ணீரையும் ஒத்துள்ளன. அவை நல்ல பணியாட்கள், ஆனால் கொடிய தலைவர்கள்

— சர் ரோசர்.


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily

Teiegrams; "EELANADU" Jaffna

Post Box: 49 Jaffra Telephone: 389

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் பங்குனி மாதம் 21ந் திகதி (4-4-71)


## ஆளும் கட்சியில் காங்கிரஸ்

அரசாங்கத்துடன் சேர்வதென்று தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் ஆட்சி மன்ற பிரதிநிதிகள் மூவரும் முடிவுசெய்து கூட்டணியினரின் பொதுக்கொள்கைத் திட்டத்தை ஏற்று ஆளும் கட்சியில் சேர்வதற்கு விண்ணப்பித்திருந்தனர். இவ் விண்ணப்பத்தை ஆளும் கட்சியும் ஏற்றுக்கொண்டுள்ளது. ஆட்சிமன்றத்தின் இப் புதிய கூட்டத்தொடர் காலத்தில் ஆளும் கட்சிக் குழுவின் முதல்கூட்டம் இன்று நடைபெறுகிறது. இக் கூட்டத்தில் புதிய அங்கத்தவர்களாக தமிழ்க் காங்கிரஸ் பிரதிநிதிகள் மூவரும் கலந்துகொள்வார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அரசாங்கத்தை எதிர்த்து நின்று தமிழ் மக்களுக்கு எதுவித நன்மையும் செய்யமுடியாதென்றும் பெரும்பான்மைச் சமூகத்தின் நல்லுறவையும் நல்லெண்ணத்தையும் பெற்றுத்தான் சிறுபான்மையினர் உரிமைகளைப் பெறலாமென்றும் எனவே ஆளும் கட்சியினருடன் ஒத்துழைக்கவேண்டுமென்றும் சென்ற பொதுத் தேர்தல் சமயத்தில் தமிழ்க் காங்கிரஸ் கூறிவந்திருக்கிறது. எனவே ஆளும்கட்சியில் சேருவதென்ற தமிழ் காங்கிரஸ் ஆட்சிமன்ற உறுப்பினர்களின் முடிவை தவறென்றோ - ஆளும் கட்சியில் சேர்வதற்கு தங்கள் வாக்காளர்களிடம் கட்டளை பெறவில்லையென்றோ சொல்வதற்கு இடமில்லை.

சென்ற பொதுத்தேர்தலில் திருமதி சிறிமா பண்டாரநாயக்க தலைமையிலான கூட்டணியினர் மிகப் பெரும்பான்மைப்பலத்துடன் வெற்றியீட்டி அவர்களுக்கு வேறு எவரின் உதவியும் ஒத்துழைப்பும் தேவையில்லாதிருந்த போதிலும் சிறுபான்மையினருக்கு நியாயம் வழங்கவேண்டுமென்பதற்காக திரு செல்லையா குமாரசூரியரை அமைச்சராகவும் திரு. எம். ஸி. சுப்பிரமணியம், ஜனாப் ஏ. அஸீஸ் ஆகியோரை நியமன உறுப்பினர்களாகவும் நியமித்ததை தமிழ்க் காங்கிரஸ் ஆட்சிமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காட்டி இப்படி நல்லெண்ணம் கொண்டுள்ள அரசாங்கத்துடன் ஒத்துழைத்துத் தான் தமிழ் மக்கள் தங்கள் இழந்த உரிமைகளைப் பெறமுடியுமென்று கூறுகிறார்கள். இந்த வாதம் சரியல்லவென்று சொல்வதற்கும் இடமில்லை.

1948ம் ஆண்டில் திரு. டி. எஸ். சேனநாயகாவின் தலைமையில் ஐக்கியதேசியக் கட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டபோதும் 1952-ம் ஆண்டில் திரு. டட்லி சேனநாயகாவின் தலைமையில் ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கம் அமைக்கப்பட்டபோதும் தமிழ்ப்பிரதிநிதிகள் குறிப்பாக அக்காலத்தில் தமிழ்ப்பகுதிகளில் அதிக செல்வாக்குப் பெற்றிருந்த தமிழ்க் காங்கிரஸ் அரசாங்கத்துடன் சேர்ந்து ஒத்துழைத்தது. 1956-ம் ஆண்டில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டபோதுதான் அதை வெறும் மொழிப்பிரச்னையாகக் கருதாமல் மானப் பிரச்னையாகக் கருதி திரு. எஸ் டபிள்யு ஆர் டி பண்டாரநாயகாவின் மக்கள் முன்னணி அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பளிக்க மறுத்தனர். இந்தநிலை 1965ம் ஆண்டுவரை நீடித்தது. 1965-ம் ஆண்டில்திரு டட்லி சேனநாயகாவின் தலைமையில் "தேசிய அரசாங்கம்" அமைக்கப்பட்டபோது தமிழ்க் காங்கிரஸ், தமிழரசுக்கட்சி ஆகிய இருபெரும் தமிழ்க் கட்சிகளுமே ஒத்துழைப்பளித்தன. தமிழரசுக் கட்சி அமைச்சரவையிலும் ஓர் அங்கத்துவம் பெற்றிருந்தது. ஆனாலும் இந்த ஒத்துழைப்பும் கூட நீடிக்கவில்லை.

ஆனாலும் 1948-ம் ஆண்டிலிருந்து 1970-ம் ஆண்டு வரை ஆட்சிபீடத்திலமர்ந்த பெரும்பான்மைக் கட்சிகளுக்கு ஒத்துழைப்புக் கொடுத்தும் எதிர்த்துநின்றும் தமிழ்மக்கள் பெற்ற பயன்பற்றிப் பெரிதாக எதுவும் சொல்வதற்கில்லை. இந்த அரசாங்கங்கள் கடைப்பிடித்த- பின்பற்றிய பொருளாதார அரசியல் கொள்கைகளும் இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இப்போது அதாவது 1970-ம் ஆண்டு பொதுத் தேர்தலில் நாட்டை சோஷலிஸ வழியில் கொண்டு செல்லப்போவதாகவும் புதிய பொருளாதாரக் கொள்கையை வகுக்கப்போவதாகவும் உறுதியளித்து மிகப் பெரும்பான்மைப்பலத்துடன் ஆட்சிபீடத்துக்கு வந்திருக்கிறது. கூட்டணி அரசாங்கம். பொருளாதாரப்பிரச்னைதான் நாட்டின் இதர தொல்லைகளுக்கெல்லாம் அடிப்படைக் காரணமென்பதும் உண்மையே பதவி மோகமும் ஆதிக்கப் போட்டியும் இந்த அடிப்படைப் பிரச்னைக்குத் தீர்வுகாண்பதற்கான முயற்சிக்கு இடையூறாக இருந்து வந்திருக்கிறதென்றும் சொல்லலாம்.

திரு. டட்லிசேனநாயகாவின் "தேசிய அரசாங்கத்தில் தமிழ்அரசுக்கட்சியினரும் தமிழ்க்காங்கிரஸ் கட்சியினரும்" அங்கம் வகித்தபோதிலும் ஆளும் கட்சிக்குள்ளும் ஆட்சிமன்றத்திலும் வெளியேயும் கூட ஒருவர்மீது ஒருவர் குறை கூறிக்கொண்டும், குற்றம் சொல்லிக் கொண்டுமிருந்தனர். இதன் விளைவாக தமிழ்ப் பிரதிநிதிகளால்கிடைக்கக் கூடிய நன்மையை விட தீமையே அதிகம் கிடைத்ததென்றும் சொல்லப்படுவதுண்டு.

இந்த நிலை இப்போது ஆளும் கட்சியில் சேரும் தமிழ்க் காங்கிரஸ் ஆட்சி மன்ற உறுப்பினர்களுக்கு இல்லை. எனவே இந்தநல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி கூட்டணி அரசாங்கத்தில் அமைச்சர் பதவியையும் ஏற்று பின்தங்கியபகுதிகளைப் பொருளாதாரத்தில் முன்னேற்றுவதற்கு முன்வந்தால் அதைஎவரும் குறை சொல்லத் துணியமாட்டார்கள் ஒருவர் மீது ஒருவர் குறை குற்றம் சொல்வதை அதவும் தமிழர்களின் பிரதிநிதிகள் ஆட்சி மன்றத்திலுள்ளேயும் சரி வெளியேயும்சரி- ஒருவர் மீது ஒருவர் வசைபாடுவதை நிறுத்திக்கொண்டு பிறரைப் பற்றிக்கவலை கொள்ளாமல் தங்கள் மீது நம்பிக்கை வைத்துத் தெரிவு செய்து அனுப்பிய மக்களுக்கு நன்மை செய்தால் போதும்.

## இன்று குருத்து ஞாயிறு

# யேசுநாதர் ஜெருசலேம் நோக்கி பவனி வந்த நாள்

— மோ. தார்சீசியஸ் —

இன்று அகில உலகிலுமுள்ள கிறிஸ்தவ மக்கள் குருத்து ஞாயிறைக் கொண்டாடுகிறார்கள். இன்றுடன் ஆரம்பிக்கும் இவ்வாரம் தவக்காலத்தின் விஷேசம் பெற்றவாரமும் இறுதிவாரமுமாகும். இந்த இறுதிவாரமான இரட்சணியத்தின் வாரத்தில் நடைபெறப் போகும் திருச் சடங்குகள் அனைத்தும் எம்மைச் சிலுவையோடு இணைக்கின்றன. சிலுவையின் வழிதான் எம் சீவியத்தின் வழியும் என்பதை நினைவூட்டுகின்றன.

இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் யேசுநாதர் ஜெருசலேம் நோக்கிப் பவனி வந்தார். அரசர்க்கரசர் அன்பின் அரசர், அவதார புருஷர் அனைத்துலக மக்களுக்காகவும் தம்மை அர்ப்பணிப்பதற்காகப் பவனி வந்தார். இவரின் வருகையை முன்கூட்டியே அறிந்த மக்கள் கைகளில் குருத்தோலைகள் கொண்டு வாழ்த்தொலிகள் வழங்க ஆயத்தமாக நின்றார்கள். யேசுநாதரும் வந்தார். அங்கே திரண்டிருந்த மக்கள் வெள்ளம் பொங்கி எழுந்தது. "ஆண்டவர் பெயரால் வருகிறவர் வாழி! இஸ்ராயேலின் அரசர்வாழி' என்று வானத்தைப் பிளக்கச் சப்தமிட்டார்கள். வாழ்வளிக்க வந்தவரை, வாழுமுன் வரலாறு வகுத்திட்ட வரை வல்லபரின் மகனை, ஒரு கழுதை மீது அமர்த்தி ஊருக்குள் கொண்டு சென்றார்கள் இப்படியாகக் கடவுளின் மகன் கழுதைமீது பவனிவருவார் என்று ஏற்கனவே இறைவாக்கினர் கூறிவைத்ததுசரியாக நிறைவேறியது. அவர் தமது முடிவு காலம் நெருங்கி விட்டதை உணர்ந்து, மனுக்குலத்துக்காக மரிக்கச் சித்தங்கொண்டு, தந்தையின் கட்டளைகளின் சிகரமாய் அமையப்போகிற கல்வாரிக் காட்சியை மனக்கண்முன் கொண்டு ஜெருசலேம் நோக்கிவந்தார்.

மக்கள் அவர் பின்னே திரண்டார்கள், அவர்போதனைகளைக் கேட்கவும் சாதனைகளைக் காணவும் ஆயிரமாயிரமாகத் திரண்டார்கள்: அதுவும் இப்பவனிக்கு முன்னர்தான், மரித்து நாலு நாட்களாக அடக்கம் பண்ணப்பட்டிருந்த லாசரை உயிர்ப்பித்தார் இதனால் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. இக் கூட்டத்தினரையும் பவனியையும் கண்ட பரிசேயர்கள் மனம் புழுங்கினார்கள். வாழ்த்தொலி வழங்கும் மக்களை நிறுத்த முனைந்தார்கள். அதுவும் முடியவில்லை கடைசியில் அவரது பவனி இராஜபவனி தொடர்ந்து கொண்டே இருந்தது

இதுதான் இன்றைய திருச்சடங்கோடு தொடர்பு கொண்டுள்ள, இரண்டாயிரம் வருடப் பழமை வாய்ந்த நிகழ்ச்சியாகும். இன்றைய இந்நிகழ்ச்சிகள் சம்பவங்கள் பழமை வாய்ந்தனவாயிருந்தாலும் எமது வாழ்க்கையோடு தொடர்பு கொண்டுள்ள பாடுகளைத் தியானிக்க உதவும் சம்பவங்களாகும். யேசுநாதரின் பாடுகளைத் தியானிக்கப் போகும் நாம், அவரின் பாடுகளைத் எமது வாழ்க்கையோடு தொடர்புபடுத்திக் கொள்ளவேண்டும். அவரின் பாடுகளில் நாங்களும் பங்கு கொள்ளவேண்டும், அவர் எந்நோக்கங்கொண்டு தமது இரத்தத்தை எமக்காகச் சிந்தினாரோ, அவரின் நோக்கம் நிறைவேற, நாம் ஒன்றுபட முயற்சிக்கவேண்டும். மண்மீது சிந்தப்பட்ட இயத்தம் மக்களுக்காகச் சிந்தப்பட்ட இரத்தம். மாசு மறுவற்ற செம்மறிப் புருவையின் இரத்தம் மக்கள் மாசகற்ற இயலாவிட்டால் அவரின் பாடுகளினால் ஒரு பலனும் கிட்டாது. பரிசுத்த வாரம் எமக்கு ஆண்டிலே ஒரு முறைதான் வரும். ஆகையினால்தான் இவ்வாரம் வருடத்தின் எல்லா வாரங்களிலும் புனிதமானதும் சிறப்பு வாய்ந்ததுமாக இருக்கிறது. எனவே நாம் இவ்வாரத்தின் இறுதி நான் திருச்சடங்குகளில் புனிதமாகப் பங்கு கொள்ளும் பொருட்டு இன்றை நாளோடுநாம்நம்மை ஆயத்தம் செய்து யேசுவின்பாடுகளின் பலனை அடைவோமாக.

நில உச்சவரம்பு சட்டம்

## இம்மாத முடிவுக்குள் அறிக்கை சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு. சனி

நில உச்சவரம்புச் சட்டத்தை அமுல் படுத்துவது சம்பந்தமாக மந்திரி சபை உபகமிட்டி இப்போது ஆராய்ந்து வருகிறது ஐக்கிய முன்னணி அரசின் தேர்தல் வாக்குறுதிகளில் நிலப்புனரமைப்புஒன்றாகும்.

கூடுதலான காணி உள்ளவர்களின் நிலத்துக்கு வரம்பு விதித்து நிலமற்றவர்கள் பிரச்னையைத் தீர்ப்பது ஐக்கிய முன்னணி அரசின் நோக்கமாகும்.

இடத்துக்குத்தக்கபடி நிலங்களின் விலைகள் வித்தியாசப்படுவது மந்திரிசபை உபகமிட்டியை எதிர் நோக்கும் முக்கிய பிரச்னையாகும்.

உதாரணமாக கொழும்பில் ஒரு ஏக்கர் நிலம் 15 லட்சம் ரூபாய் விலைமதிக்கப்படும் அதே வேளையில் பின் தங்கிய பிரதேசங்களில் ஒரு ஏக்கர் நிலம் ஆயிரம் ரூபாய்க்குக் குறைவாக விலைமதிக்கப்படுகிறது.

இம்மாதம் முடிவுக்குள் மந்திரிசபை உபகமிட்டி அறிக்கையை சமர்ப்பிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

## ஆசிரியர் சம்பளப்பாக்கி: வழங்க நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடமாநிலத்திலுள்ள ஆசிரியர்களின் சம்பளப் பாக்கிகள், நிலுவைகள் வழங்கப்படாமல் இருக்கும் பட்சத்தில் அவற்றை விசாரித்து துரித நடவடிக்கை எடுக்க கல்வி அமைச்சு நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. இதுசம்பந்தமாக விசாரணைகள் மேற்கொள்ள வடமாநிலக் கல்வித் திணைக்களக் கணக்காளரைத் தலைவராகக்கொண்ட மூவர் கொண்ட குழுவொன்றை அமைச்சு அமைத்துள்ளது. வடமாநிலக் கல்வித் திணைக்கள நிர்வாக அதிகாரியும் ஒரு தொழிற்சங்கப் பிரதிநிதியும் இக்குழுவில் அங்கம் வகிப்பர்.

சம்பளத்திட்ட மாற்றம், பதவி, தராதர உயர்வுகள் காரணமாக ஏற்படும் இச் சம்பள நிலுவைகளை விசாரிக்கவே இக்குழு நியமிக்கப் பட்டுள்ளது. வடமாநிலத்திலுள்ள ஆசிரியசங்கங்கள் இக்குழுவிற்குத்தங்கள்முறைப்பாடுகளை எழுத்துமூலம் தெரிவிக்கவேண்டும் முறைப்பாடுகள் பரிசிலனைசெய்யப்பட்டுத் துரிதநடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## மாணவியும், வாலிபனும் மானிப்பாயில் கைது

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணத்திலுள்ளமகளிர்கல்லூரிஒன்றின் மாணவியையும் அம் மாணவியை கடத்திச்சென்றதாக கூறப்படும் கொட்டடியைச்சேர்ந்த வாலிபனையும் பொலிசார் சந்தேகத்தின்பேரில் மானிப்பாயில் கைது செய்தனர். யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. கொல்வின் மெண்டிஸ் முன்னிலையில் மாணவியையும் சந்தேக நபரான வாலிபனையும் பொலிசார் ஆஜர் செய்தனர்.

சந்தேகநபர் சார்பில்புரக்டர் தளையசிங்கம் யோகநாதனும் மாணவி சார்பில் புரக்டர் ஏ, அன்ரனியும் ஆஜரானார்கள்.

மாஜிஸ்திரேட் சந்தேக நபரை இம்மாதம் 10ம்தேதி வரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டு மாணவியை தாயாருடன் செல்ல அனுமதித்தார்.

## கம்யூனிஸ்ட் கிளை மாநாடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடபிரதேச கம்யூனிஸ்ட் கட்சி கிளை மகாநாடு. இம் மாதம் 11-ம் திகதி ஆனைப்பந்தி உயர்நிலைப் பள்ளி மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இம் மகாநாட்டில் புதிய மாவட்டக்குழு தெரிவுசெய்யப்படவிருப்பதாகவும் இன்றைய அரசியல் நிலைமை பற்றி ஆராயப்படவிருப்பதாகவும் கம்யூனிஸ்ட்கட்சி உறுப்பினர் ஒருவர் தெரிவித்தார்.

இசைப்புலவ...

ஏழாலையில்

குளிர்த்தி

கருத்தர...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

...க்கிப்

...ப்புலவருக்கு
...பாராட்டு

...ழ்ப்பாணம், ஞாயிறு
...ட்டுபசமாலைபாடிய
...லவர் செல்லத்
...னை மெய்மறக்கச்
...ட்டார். சங்கராப
... ஆரம்பித்து ஹர
...ப, கல்யாணி,
...தி, சண்முகப்பிரியா
... நல்லதொரு காபி
...து அவற்றைச் சுரு
...தியமாவதியில் முடி
...ராட்டுப்பாவில் நவ
...ாலிகை பாடி ஒரு
...ச்சேரியே செய்து
... இராகங்கள்,
... புஷ்டி நிறைந்து
...ருக்கேற்ப உணர்ச்சி
...து பாடி என்னை
...க்கச் செய்தார்.
... இலங்கை சங்கீத
...ல் திரு பாலசந்த
...ணைவாத்திய வித்யா
... என்னும் பட்டம்
...போது பாராட்டு
... பாடிய இசைப்புல
... செல்லத்துரையின்
...யைப் பாராட்
...திய இசைமேதை
...ஸ். பாலசந்தர்
...டவாறு கூறினார்.

...யில்

...ர்த்தி விழா

...ழ்ப்பாணம், ஞாயிறு
...ல—மத்தி துவ
...ட்டி வற்றுப்பளை
...கை அம்மன் கோவில்
...த குளிர்த்தி இம்
... 12-ந்திகதி நடை
...ருக்கிறது. அடுத்து
...கை அம்மன் வருடா
...ற்சவம் இம்மாதம்
...கதி ஆரம்பமாகித்
...ந்து விழா பத்து
... நடைபெறும்.

......

...ாயக்
...ருத்தரங்கு

வேலணை. சனி
...ாயிகளுக்கான கருத்
... ஒன்று வேலணை
...தி வித்தியாசாலையில்
...பற்றது.
...குதி விவசாய விஸ்
... அதிகாரி திரு.
...க்கவாசகரின் ...
... செய்யப்பட்ட இக்
...கின்போது ஊர்கா
...றப்பகுதி விவசாய
...சிரியர் பயிர்ச் செய்
...ழ மற்றும் பநோ
...வுசங்க பிரதிநிதிக
...ந்துகொண்டனர்.
...ாய், நெல் முதலிய
...ு வரும் நோய்
...ம் அவற்றிற்கான
... பற்றியும் திரு.
...கவாசகர் விளக்கிக்
....
...சி இராசரத்தினம்
...தரிவித்துப் பேசுகை
... கமக்காரர்களுக்குத்
...பான அரசாங்
... வழங்கப்படும்
...ற்றும் மருந்துவகை
... மத்திய ஸ்தானமாக
...ம் வேலணையில்
...பெற வசதிசெய்ய
...மென்றும், யப்பான்
...ப்ச் செய்கையை
...தியில் ஊக்குவிப்பது
...பொருத்தமென்றும்
...யில் உற்பத்தி
...ப்படும் மிளகாய்
...வாதவிலையில் விற்க
...திருப்பதால் இக்கஷ்
...ப்போக்க நட
... எடுக்கவேண்டும்
... கேட்டுக்கொண்

# ஐயாயிரம் பேர் பார்த்து மகிழ்ந்த சிறுவர் சித்திரக் கண்காட்சி!

அண்மையில் பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகளுக்கிடையில் ஏற்படுத்தப்பட்ட சிறுவர் சித்திரக் கண்காட்சியை சுமார் ஐயாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பார்த்து மகிழ்ந்தார்கள்,

வரலாற்றுப் புகழ்மிக்க பருத்தித்துறையில் தனக்கென ஒரு தனி வரலாறு அமைத்துக்கொண்ட கல்விப் பீடமான ஹாட்லிக் கல்லூரியில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதிலும் ஒரு பொருத்தம் உண்டு, விஞ்ஞான கல்வியில் அதிக அக்கறை செலுத்தும் இக்கல்லூரியில் கலைக் கண்காட்சி இடம் பெற்றதால் கலைக்கும் விஞ்ஞானத்திற்கும் ஒரு சமன்பாடு நிறுவப்பட்டது.

பரம்பரையாகப் புனித கலைத்தொண்டாற்றி வரும் ஒரு கலைக் குடும்பத்தில் பிறந்தவர் என்பதால் மட்டுமன்றி தானே ஒரு சிறந்த கலைஞராக விளங்கும் வடமாநிலச் சித்திர வித்தியாதிகாரி திரு ஆ. தம்பித்துரை அவர்கள் இந்தக் கண்காட்சியை ஏற்பாடு செய்திருந்தார், அவர் சென்றவிடமெல்லாம் சித்திரக் கலை மணக்கும் பாணியில் செயலாற்றுவது அவர் கடமையோ என்னவோ அவரைப் பொறுத்தவரையில் அது ஒரு நித்தியகருமவிதி- நீங்காத உரிமை. இந்தக் கண்காட்சியை அமைப்பதற்கு பருத்தித்துறைக் கல்வி அதிகாரி திரு க. நவரத்தினம் அவர்கள் காட்டிய ஒத்துழைப்பு பாராட்டத் தக்கது! அத்துடன் ஹாட்லிக் கல்லூரியின் சித்திர ஆசிரியரான திரு ஆ. மார்க் சிதம்பராக் கல்லூரி சித்திர ஆசிரியரான திரு பாலசுப்பிரமணியம், மெதடிஸ்த பெண்கள் கல்லூரி சித்திரஆசிரியரான திருமதி விஜயரத்தினம் ஆகியோர் கடமையாக மட்டுமல்ல கலையோடு ஒன்றிப்போன கலையுணர்வால் இக் காட்சிக்கு ஆக்கமும் அமைப்பும் அழகும் தந்தனர். அதே நேரத்தில் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்பதற்கு இலக்கியமாய்ச் செயலாற்றும் ஹாட்லிக் கல்லூரி பதில் அதிபர் திரு டபிள்யூ என். எஸ். சாமுவேல் வல்வை சிதம்பராக்கல்லூரி பதில் அதிபர் திரு சத்தியமூர்த்தி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரி அதிபர் செல்வி மனோரஞ்சிதம், ஆறுமுகம் ஆகியோர் உள்ளத்தாலும் உணர்வாலும் செயலாலும் இக்காட்சிக்குசிறந்த முழுமையான ஒத்துழைப்பு நல்கியிருக்கிறார்கள். இது போற்றுதற்குரியது இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல விஞ்ஞானத்துக்கும் கலைக்கும் உள்ள நெருங்கிய உறவைப் பிரதிபலித்து வாழ்ந்த முத்தமிழ் வித்தகர் விபுலானந்த அடிகளின் அபிமான மாணவரும் யாழு மாவட்ட பிரதம கல்வி அதிகாரியுமான திரு ஆ. சந்திரசேகரம்பிள்ளை அவர்கள் இந்தக் காட்சியைத் திறந்து வைத்தார்கள். அவரது தொடக்கவுரையில் கலைக்கும்விஞ்ஞானத்துக்கு மிடையிலுள்ள உறவையும் விஞ்ஞானக் கல்வி பற்றிய போலிக் கௌரவமும் கலைக் கல்விபற்றிய தவறுனதாழ்வு மனப்பான்மையும் நீக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி விஞ்ஞானத்துக்கும் கலைக்குமிடையில்சமன்பாடு நிலவவேண்டும் என்று கேட்டுக்கொண்டது பல வகையிலும் பொருத்தமாக அமைந்தது.

காட்சிக்குள்ளே செல்கிறேன். நினைவு அலைபாயும் உள்ளத்தில் கனிவு நிலைப்பாடு ஏற்படுத்த வல்லது. இனிய கலைகள்தாம் என்பதை இந்தக் கண்காட்சி எடுத்துக்காட்டியது. 'அழகான ஒரு பொருள் அழியாத இன்பம் பயப்பது' என்ற கவிஞர் ஜோர் கீட்ஸ் அவர்களின் கூற்றும் அழகு பார்வையாளர் கண்களிலே தான் உள்ளது, என்ற ஒரு சிறந்த விமர்சகரின் கூற்றும் நினைவுக்கு வந்தது. எங்கு பார்த்தாலும் அழகுச் சித்திரங்கள் - குழந்தைகளின் மாசுபடா உள்ளங்களில் சுடர்விட்ட சித்திரப்படைப்புகள் பார்ப்பதற்கு ஒரே இன்பமாக இருந்தன.

— ஆ. தேவராஜன் —

'கலைப்படைப்பின் செய்முறையை மறைப்பது கலைஞன் கலை, அந்தச் செய்முறையை மீண்டும் வெளிக்கொணர்வதே விமர்சகன் கலை என்று விமர்சனத்துக்கு இலக்கணம் வகுத்தாற் போல ஒரு விமர்சகர்கூறிய கூற்று எனக்குத்துணை செய்தது. படைப்புகளின் அம்சங்களைத் துருவித் துருவிப் பார்த்தேன். கருத்து வெளிப்பாட்டுச்சித்திரங்கள் வர்ணனைச் சித்திரங்கள் இயற்கைக் காட்சிகள் என்று பல்வேறு பிரிவுகளாகக் காட்சி அமைந்திருந்தது.

குழந்தை உள்ளங்கள் இவற்றைப்பற்றிக்கொண்டு கலைவண்ணம் செய்துள்ளமை பிரமிக்க வைத்தது.

அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலை, அல்வாய் அம்பாள் வித்தியாசாலை வல்வை சிவகுரு வித்தியாசாலை, தும்பளை சிவப்பிரகாச வித்தியாசாலை, செம்பியன் பற்று றோ. க. பாடசாலை, அல்வாய் சேமமே வித்தியாசாலை, சென் தோமஸ் மகளிர்பாடசாலை, புலோலி ஆண்கள் பாடசாலை வல்வை சிதம்பரக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்நிலைப் பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி ஆகியன கணிசமான சித்திரங்களைக் கவர்ச்சியான முறையில் வழங்கியிருந்தன. இதனால் ஏனைய பாடசாலைகள் குறைவென்று சொல்வதற்கில்லை. அவையும் பாராட்டக்கூடிய வகையில் அணி செய்தன. வாரத்தில் ஒருநாள் மட்டும் சித்திர வகுப்பு நடத்தும் புலோலி ஆண்கள்பாடசாலை ஒரு பரிசைத் தட்டிக்கொண்டது குறிப்பிடவேண்டிய ஒன்று. அது கற்றுக்கொடுக்கும் ஆசிரியர் திரு மார்க் அவர்களின் கலை ஆற்றலையும் அப்பாடசாலை மாணவரிடையே மறைந்து கிடக்கும் கலை உணர்வையும் சுட்டிக் காட்டுகின்றது.

இவை இவ்வாறிருக்க காட்சிக்கு மெருகுதரும் பொருட்டு வளர்ந்த மாணவர்களின் கலைப் படைப்புகளும் இடம்பெற்றன. அவற்றுள் வல்வை சிதம்பரக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்நிலைப் பாடசாலை ஹாட்லிக் கல்லூரி ஆகிய பாடசாலைகளின் மாணவர்களும் அவர்களின் ஆசிரியர்களும்போற்றப்பட வேண்டியவர்கள், மூன்று பாடசாலைகளும் மூன்று அம்சங்களைப் பிரதிபலித்தன. வல்வை சிதம்பரக் கல்லூரி சேலைக்கரை வேலைப்பாட்டுக் (சாரி போடர் டிசைன்ஸ்) கலையில் நிபுணத்துவத்தை தெளிவாகக் காட்டிற்று. சேலைத் [illegible] துக் கொண்டு கலைவண்ணம் சேர்க்கும் கலையில் பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்நிலைப் பாடசாலை தனித்துவம் வாய்ந்தது என்பதை அப்பாடசாலை மாணவியர் படைப்புகள் எடுத்துக் காட்டின. அவர்கள் காட்சிக்கு வைத்திருந்த சேலைத்துண்டுகளாலான பூச்சாடிகள் வெகுபிரமாதமாக இருந்தன. ஹாட்லிக் கல்லூரி கடதாசியில் கலைவண்ணம் காட்டும் கலையில் மிகவும் பிரமிக்கக் கூடிய முறையில் திறமையைக் காட்டியிருந்தது.

தாகூரின் கலைக்கண்ணில் சுடர் கொட்டவைத்தது போல் தன் தீபத்திலும் எழிற்சுடர் சேர்த்திருந்தார் விஜயகுமார் இராதகிருஷ்ணனின் கலைப்படைப்புகள் பார்த்தோர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டன அவர் பெயருக்கேற்ற கலாவினோதத் தன்மை அவர் படைப்புகளில் மிளிர்ந்தன வீணை மீட்டும் பெண்ணின் படைப்பில் வீணை நரம்பு மீதுவிரல் ஊரும்லாவண்யம் மிகப் பிரமாதம். நடனமாடும் மாதின் ஒயிலான நிலையும் நளினமான அபிநயமும் கலையோடு ஒன்றிய உணர்வுதெளிவும் மிகவும்பிரமாதம் அடுத்தது கலிங்கத்துப் பரணியின் தூது இலக்கியக் காட்சி ஒருகாதல் காட்சி! காதலனைக் காணாது பசலை படர்ந்து உடல் சோர்ந்து உளம் நெகிழ்ந்து வாடிய மங்கை கிளியிடம் தூது சொல்கிறாள் அவளின் சோகமே உருவான நிலை அவள் அங்கலாய்க்கும் கண்களின் பரிவு அப்பப்பா செல்லவே முடியாத அலாதி அழகு! அந்தக் கிளி கிரமேற்கொண்டு தூது செல்லமிக அக்கறையோடு சேதி கேட்கும் நிலை என்ன அழகு! அவரது கலாமயமிலும் கலை மயிலாகவே காட்சி தந்தது. சாள்ஸ் இராஜகுமாரின் மீன்பிடிக் காட்சிநன்றாகஇருந்தது இராஜன் சிவகுமாரின் திருவள்ளுவர் குறட்பொலிவோடு வீற்றிருந்தார் சீன ஓவியங்களைப் போன்ற பூங்கொத்துகள் கொண்ட ஓவியங்களை கிருஷ்ணராஜா தீட்டிவைத்திருந்தார் சீன ஓவியங்களோ என்று ஏங்க வைத்தன அவை! அ. தர்மகுலசிங்கம் சி ஆர், அருளம்பலம் ஆகியோரின் படைப்புகளும் பாராட்டக் கூடியதாக இருந்தன வெறும் கடதாசியைவெட்டிஎன்னென்ன செய்தார்கள்! இத்தனைக்கும் இவர்களுள்ஒருவரைத்தவிர ஏனையோர்விஞ்ஞானமாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது கலையே ஒரு விஞ்ஞானம் என்பதை இது நிரூபிக்கிறது.

மையும் இறகும் கொண்டு பேசும் உயிர்ப் படைப்புகளை ஆக்குவதென்றால் அது சாதாரணகாரியமா? அல்லது ஒரு வாய்ப்பாட்டு முறைக்குள் அடங்குவதா? இல்லையே! ஒரு விஞ்ஞான உள்ளத்தால் தான கிரகித்து அளவெடுத்து உயிர்த்துடிப்போடு ஆக்க முடியும். வாழ்வு வளம் பெறக் கலைகளும் கலைக் காட்சிகளும் பல்கிப்பெருக வேண்டும்.

## அன்பில் மலர்ந்த அமரகாவியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு 'திருமறைக் கலாமன்றத்தினர் அளிக்கும் அன்பில் மலர்ந்த அமரகாவியம்' என்ற நாடகம் நாளை மாலை 7மணிக்கு யாழ். விளையாட்டரங்கில் மேடையேற்றப் [illegible] கலைஞர்கள் இந்நாடகத்தில் பங்குபற்றுகின்றனர்.

## தேவாலயம் பூட்டப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு இளவாலை அர்ச். அன்னம்மாள் தேவாலயத்தில் மற்றொரு சமயத்தவரின் வழிபாட்டிற்குரிய சின்னம் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து தேவாலயம் பூட்டப்பட்டது. இச்சம்பவம் குறித்து நால்வரை பொலிசார் தேடிவருகின்றனர்

அர்ச். அன்னம்மாள் தேவாலய உற்சவ ஊர்வலத்தில் சிறுபான்மை சமூகத்தவர்களும் கலந்து கொள்ள முயற்சித்ததைத் தொடர்ந்து ஊர்வலம் கடைசிநேரத்தில் ரத்து செய்யப்பட்டது

குருத்தோலைஞாயிறு பலிபூசையை இன்று தேவாலயத்தில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது இன்று தேவாலயத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படும்.

## சத்திரத்துச் சந்தி கொலை வழக்கு

யாழ்ப்பாணம், ஞாயிறு சந்திரத்துச்சந்தி கொலை வழக்கு இம்மாதம் 19-ம் தேதிக்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

## விளையாட்டுச்சங்கம்

வேலணை, சனி

தீவுப்பகுதிக்காரியாதிகாரி பிரிவு விளையாட்டுச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் காரியாதிகாரி அலுவலகத்தில் வேலணைக்கிராம சபைத்தலைவர் திரு. க. சதாசிவம் தலைமையில்நடைபெற்றது.

விளையாட்டு அமைச்சின் விளையாட்டுச் சங்க உபவிதிகள் சபையில் வாசிக்கப்பட்டு சபையோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது:

உபவிதிகளுக்கமைய திரு. க. சதாசிவம் போஷகராகவும் வேலணை சனசமூக நிலையங்களின்சமாச தலைவர் திரு சி இராசரத்தினம் உபபோஷகராகவும் தெரிவு செய்யப்பட்டனர். தலைவராக திரு பி நடராசா (காரியாதிகாரி), காரியதரிசியாக திரு பி பொன்னுச்சாமி (விளையாட்டு பயிற்சி ஆசிரியர்) மற்றும் நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

......

சமையல்

## உருளைக் கிழங்கு இனிப்பு

தேவையான பொருட்கள்:

| | |
|---|---|
| உருளைக்கிழங்கு | - 1 ருத் |
| சர்க்கரை | - 1 ருத் |
| நெய் | -3 மேசைக்கரண்டி |
| குங்குமப்பு, ஏலம் | சிறிதளவு |

செய்யும் முறை:

உருளைக்கிழங்கை நீரில் அவித்து எடுத்து தோல் நீக்கிப் பொடியாக உதிர்த்துக் கொள்ளவும் சர்க்கரையைப் பாகாகக் காய்ச்சி அத்துடன் இந்தப் பொடியையும் நெய்யையும் சேர்த்துக் கிளறி இறக்கி குங்குமப் பூவை சிறிது பாலில் கரைத்துச்சேர்க்கவும். நெய் தடவிய தாம்பாளத்தில் கொட்டிப் பரப்பிக் கத்தியால் துண்டு போடவும். ஆறிய பின்னர் எடுத்துப் பரிமாறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கிழக்குப் பாகிஸ்தான் மக்கள்

# அடக்கி ஒடுக்குவதை கடுமையாக கண்டிக்கிறோம்"

கோட்டை, சனி

"கிழக்கு பாகிஸ்தான் மக்கள் அண்மையில் ஏற்பட்ட புயலின் கொடுமையால் அல்லலுற்று சீரழிந்து இருக்கும் போது அவர்களுக்கு வளமான வாழ்வை அளிக்க வேண்டிய நீங்கள் இராணுவத்தை ஏவி அவர்களின் விடுதலை வேட்கை உணர்வுகளை அடக்கி ஒடுக்குவதைக் கடுமையாகக் கண்டிக்கிறோம்"

இவ்வாறு உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் இலங்கைக்கிளை பாகிஸ்தான் ஜனாதிபதி யாஹ்யாகானுக்கு பாக். உயர் ஆணையாளர் ஊடாக அனுப்பி வைத்துள்ள அவசரக் கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளது. இந்தக் கடிதத்தில் 500 கையொப்பங்கள் இடப்பட்டுள்ளன.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது 'கீழே கையொப்பமிட்டவர்களாகிய நாங்கள் கிழக்குப் பாகிஸ்தானில் எமது முஸ்லிம் சகோதரர்களைப் பாகிஸ்தான் துருப்புகள் கொன்று குவிப்பதை மிகவும் எதிர்க்கின்றோம்.

பாகிஸ்தான் இராணுவ ஜனாதிபதி என்ற முறையில் பாகிஸ்தான் மக்களின் எண்ணங்களையும் கருத்துக்களையும் நிறைவேற்ற வேண்டியது உங்கள் தலையாய கடமை. ஆனால் பல இலட்சக்கணக்கான முஸ்லிம் சகோதரர்களினதும் சகோதரிகளினதும் தாய்க்குலத்தினதும் பச்சிளம் குழந்தைகளினதும் சடலங்களின்மேல் பட்டாளப் பலத்தைக்கொண்டு கட்டியெழுப்பப்படும் செயற்கை ஒற்றுமை அதிக காலத்திற்கு நிலவமாட்டாது என்பது திண்ணம்.

கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இராணுவத்தை உடனடியாக வாபஸ் செய்து கிழக்குப் பாகிஸ்தானுக்குப் பூரண சுதந்திரம் வழங்கும்படி கோருகின்றோம். வாழ்க கிழக்குப் பாகிஸ்தான் மக்கள்! வெல்க முஜிபுர் ரஹ்மான் கொள்கை!

# 'படுகொலை செய்யப்படுவது நிறுத்தப்பட வேண்டும்'

கோட்டை, சனி

"மனிதாபிமானமற்ற முறையில் நிராயுதபாணிகளான கிழக்குப் பாகிஸ்தானிய மக்கள் மேற்குப் பாகிஸ்தானிய இராணுவ ஆதிக்க வெறியர்களினால் படுகொலை செய்யப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும். உதட்டளவில் ஜனநாயகமும், மனித உரிமைப் பிரகடனமும் பேசித் திரியும் அரசியல்வாதிகளின் சர்வாதிகாரப் போக்கையே மேற்குப் பாகிஸ்தான் ஆட்சியாளரின் மனிதவதை உலகிற்குத் தெளிவாகக் காட்டுகிறது" என்று உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் இலங்கை கிளையினரின் விசேட செயற்குழுவிற்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. ஆ. நடராஜா குறிப்பிட்டார்.

கொட்டாஞ்சேனை சிறிசிவானந்த வீதியில் பேரவையின் தலைமை அலுவலகத்தில் மேற்குப் பாகிஸ்தானின் இராணுவ நடவடிக்கையினைக் கண்டிக்கு முகமாகக் கூட்டப்பட்ட விசேட அவசரக் கூட்டத்தில் பேரவையின் அமைப்பாளர் திரு. க. நவசோதி பேசுகையில், "தனிப் பண்பாட்டோடும் வாழ்க்கை முறையோடும் வாழும் ஏழரைக்கோடி கிழக்குப் பாகிஸ்தானிய மக்கள் இராணுவ அடக்குமுறைகளை வீரத்தோடும் வெற்றிப் பெருமிதத்தோடும் எதிர்த்துப் போராடி வரும் சம்பவம் உலகின் மூலை முடக்குகளிலும் பட்டி தொட்டிகளிலும் ஆட்சியாளரின் அடக்குமுறையினால் நசிபட்டு வாழும் சிறுபான்மை இன மக்களுக்கு விடுதலைப் போராட்டத்திற்கான புத்துணர்ச்சியையும் உற்சாகத்தினையும் அளித்திருக்கிறது. என்று குறிப்பிட்டார்.

இலங்கை இளந்தமிழர் முன்னேற்ற மன்றப் பிரமுகர் திரு. கு. செல்வச்சந்திரன் பேசுகையில், மேற்குப் பாகிஸ்தானின் இராணுவ அடக்குமுறையினை நிறுத்துவதற்கு ஐக்கிய சபை தலையிடவேண்டும் என்று குறிப்பிட்டார்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 4—4—71

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00 இரவு 9-00)

844 மீ அல் 61 மீ

6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 கத்தோலிக்க நற்சிந்தனை, 6-35 பக்திப்பாடல்கள், 7-15 மெல்லிசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

844மீ அல் 49 மீ

பகல் 12-00 சித்திரகானம், 1-00 மாதர்கேட்டவை.

844 மீ அல்ல 61 மீ

மாலை 4-30 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள்.

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 மெல்லிசை, 6-30 உலகைச் சுற்றி, 7-00 கானமஞ்சரி, 7-15 பாட்டு 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

## வாலிப முன்னணி நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, சனி

தமிழரசுக் கட்சியின் வேலணை கிழக்கு வாலிப முன்னணிக் கூட்டம் திரு. எஸ். கனகரத்தினம் தலைமையில் நடைபெற்றபோது பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் திரு. வி. எஸ். கனகரத்தினம் இபதலைவர் திரு. பி. வீரசிங்கம், காரியதரிசி திரு கே அம்பிகாபதி, தனாதிகாரி திரு கு சத்தியமூர்த்தி. நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

……

## அசைஸ் விசாரணைகள்

மட்டக்களப்பு, சனி

கீழ்மாகாண உயர்நீதிமன்ற பருவ விசாரணைகள் இம்மாதம் 18-ம் திகதி மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றக்கட்டிடத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. நீதியரசர் ஏ. [illegible] முன்னிலையில் இவ்விசாரணைகள் நடைபெறும்.

## சிறுமியின் பரிதாப மரணம்

கண்டாவளை, சனி

பரந்தன் முரசுமோட்டையைச் சேர்ந்த பரமேஸ்வரி இரத்தினம் எனும் பத்து வயதுச் சிறுமி தற்கொலை செய்துகொண்டார். தாயார் ஏசியதாலேயே இவர் மனமுடைந்து தற்கொலைசெய்துகொண்டதாக விசாரணையில் தெரியவந்தது.

பாடசாலையில் நடைபெறும் தவணைப் பரீட்சைக்குக் கொடுக்க ஐந்து ரூபாயைத் தயாருக்குத் தெரியாமல் எடுத்துச் சென்றாராம். வீட்டுக்கு வந்தவுடன் இதனைத் தாயார் விசாரித்துக் கண்டித்ததினால் கவலையடைந்த சிறுமி மருந்தைக் குடித்து மரணமானார் என விசாரணையில் தெரியவந்தது.

……

## 12 பட்டதாரிகளுக்கு பிரி. உபகாரச் சம்பளம்

லண்டன், ஏப் 3

சாம்ராஜ்ய நாடுகளைச் சேர்ந்த பன்னிரண்டு பட்டதாரிகள் உபகாரச் சம்பளம் பெற்று பிரிட்டனில் உஷ்ணவலய மருத்துவ ஆராய்ச்சிகளை மேற்கொள்ளுமுகமாக வெளிநாட்டு அபிவிருத்தி நிர்வாக இலாகா மேலும் 15,000 பவுண்கள் ஒதுக்கியுள்ளது.

பிரிட்டனில் ஆராய்ச்சிப் பயிற்சிகளை மேற்கொண்டு முடித்தபின் தம்நாட்டிற்குத் திரும்பி, அங்கு பயன்தரும் மருத்துவ ஆராய்சிகளை மேற்கொள்ள விரும்பும் பட்டதாரிகளுக்கு சிறந்த முழுநேர ஆராய்ச்சிமுறைகளைப் பயிற்றுவிப்பதே இவ்வுபகாரச் சம்பளத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

பிரிட்டிஷ் பிரஜைகளைத் தவிர்ந்த ஏனையோருக்கான இவ்வுபகாரச்சம்பளத்திற்கு விண்ணப்பிப்போர், வைத்திய அல்லது மிருக வைத்திய பட்டதாரிகளாக இருக்கவேண்டுமென்பதில்லை. உஷ்ணவலய மருத்துவத்தை மூலமாகக் கொண்டு, ஆராய்ச்சிப் பயிற்சியை மேற்கொள்ள விரும்பும் மற்றைய துறைப் பட்டதாரிகளும் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

……

## புத்தாண்டு விழா

அம்பன், சனி

வடமராட்சி வடக்கு கிழக்கு காரியாதிகாரிபிரிவு புத்தாண்டுவிழா பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் 13-ம், 15-ந் திகதிகளில் நடைபெறவுள்ளது இவ்விழாவில் பாரம் தூக்குதல், பொல்லு இழுத்தல், ஆணழகன் தெரிவு, நாடகங்கள் ஆகியன இடம்பெறும். விபரங்களை மேற்படி காரியாதிகாரி பிரிவு விளையாட்டதிகாரியுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம். இதற்கான ஒழுங்குகளை காரியாதிகாரி திரு. மு. தம்பிமுத்துவும் திரு. சு. கதிர்காமத்தம்பியும் செய்துவருவதாகத் தெரிய வருகிறது.

……

## பொத்துவில் தொகுதியில் வீடுகள்

கோட்டை, சனி

இந்தஆண்டு மீனவர்களுக்காக பொத்துவில் பகுதியில் 20 வீடுகளும், கோமாரிப் பகுதியில் 10 வீடுகளும், திருக்கோவில்பகுதியில் 10 வீடுகளும் கட்டப்படவிருக்கின்றன.

பொத்துவில் ஆட்சிமன்ற உறுப்பினர் ஜனாப் எம். ஏ. மஜீத்தின் வேண்டுகோளை அடுத்து மீன்பிடித்தொழில் அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ஸ இதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி தமது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.

# கொள்ளையடிக்கப்பட்ட கார் பொலிஸிடம் அகப்பட்டது!

வல்வெட்டித்துறை, சனி

கடந்த ஜனவரி மாதம் 19-ந் திகதி கொழும்பு மருதானை என்னுமிடத்தில் ஒரு கொள்ளைக் கோஷ்டியினரால் சாரதியை பயமுறுத்திக் கொள்ளை அடித்துக் கொண்டு வந்த கார் ஒன்று வல்வெட்டித்துறையை அடுத்துள்ள கம்பர்மலையில் இருப்பதாக வல்வெட்டித்துறைப் பொலிசாருக்கு இரகசியத் தகவல் ஒன்று கிடைத்தது. குறிப்பிட்ட காரைத் தேடி கம்பர்மலைக்குச் சென்ற சமயம் அக்கார் விலை பேசப்பட்டு இனி நொச்சிக்கு விற்கச் சென்றதாகத் தெரிய வந்தது. வல்வெட்டித்துறைப் பொலிசைச் சேர்ந்த திரு. பி. பி. விஜயதுங்கா, ஆனந்தசிங்கா ஆகியோர் அக்காரையும் அதிலிருந்த 5 பேரையும் ஆனையிறவு தடுப்புமுகாமில் வைத்து கைது செய்தனர். கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களையும் காரையும் வல்வைப் பொலிசார் மருதானைப் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

# 'வடக்கு அபிவிருத்திகருதியே அரசுடன் சேர்ந்தோம்'

— நல்லூர் எம். பி.

அரியாலை, சனி

'கடந்தகால ஆட்சியாளர்கள் வடபகுதியில் எந்தவிதமான முன்னேற்றச் செயல்கள் அபிவிருத்திகள் எதனையுமே செய்யவில்லை. இன்று நாட்டில் வேலையில்லாப் பிரச்னைகள் பெருகி வருகின்றன. மிக இக்கட்டான நிலையை நோக்கி பொருளாதார நிலை மிகவும் மந்தமடைந்து வருகிறது. எதிர்காலத்தில் எமது சந்ததிகள் நல்ல முறையில் வாழ வேண்டிய நலனை முன்னிட்டுத்தான், அரசாங்கத்துடன் சேர்ந்துழைப்பது என முடிவு செய்துள்ளோம்.

மேற்கண்டவாறு அரியாலையில் நடைபெற்ற தமிழ்க் காங்கிரஸ் வாலிப முன்னணிக் கிளை உறுப்பினர்கள் அடங்கிய கூட்டத்தில் நல்லூர் எம் பி திரு சி அருளம்பலம் கூறினார்.

அவர் தமது உரையில் மேலும் கூறியதாவது-

வடபகுதியில் இன்று அபிவிருத்தி குன்றிவருகின்றது. கைத்தொழிற்சாலைகள் இன்னும் அமைக்கவேண்டியுள்ளன. இந்நிலையில் மக்கள் அரசிலிருந்துதாம் உதவிகளை எதிர்பார்ப்பதாலே மக்களின் நன்மையைக் கருதியும் மக்கள் துயர் துடைப்பதற்காகவுமே நாம் மக்கள் அரசுடன் சேர்ந்தோம்

சிறுபான்மையினத்தை ஒருபோதும் அரசாங்கம் நசுக்காது. கடந்த காலங்களில் நடந்தவைகளை மறந்து 'மக்கள் அரசுக்கு' ஒத்துழைப்பு நல்க மக்கள் தயாராக வேண்டுமென வேண்டுகிறேன். மேலும் வெளிநாட்டில் இருக்கும் தமிழ் காங்கிரஸ் தலைவர் திரு ஜீ ஜீ பொன்னம்பலம் வந்ததும் மக்கள் அரசுடன்சேர்ந்தது பற்றி விளக்கிக் கூறப் போவதாகவும் கூறினார்.

# 'இந்த அரசாங்கத்துக்கு கடமைப்பட்டிருக்கிறோம்'

எம். ஸி.

யாழ்ப்பாணம், ஞாயிறு

'சமூக ஒழிப்புக்குறைபாடுகள் சட்டத்தை பூரணமாக நிறைவேற்றியமைக்கு 5லட்சம் சிறுபான்மைத்தமிழ் மக்களும் இந்தஅரசாங்கத்துக்கு நன்றிதெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளனர். முந்திய அரசாங்கம் ஆட்சி செலுத்திய போது சமூக ஒழிப்பு குறைபாடுகள் சட்டத்திலுள்ள சில குறைபாடுகளை நீக்கி பூரணமாக அமுல்நடாத்தும்படி, எமது மகாசபை இயக்கம் கேட்டுக்கொண்டது. நாங்கள் யாழ் கச்சேரி அலுவலகத்தின்முன்பு உண்ணாவிரதம்பூண்டு சத்தியாக்கிரகம் கூட இருந்தோம். அப்போதிருந்த பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா எங்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதாக வாக்களித்துவிட்டு பின்பு ஏமாற்றிவிட்டார். திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அரசாங்கம் ஆட்சிக்கு வந்ததும் எமது சமூகத்தினரின் நலன் கருதி நியமன எம். பி. ஒருவரைத் தெரிவுசெய்தது மல்லாமல், சமூக ஒழிப்புக்குறைபாடுகள் சட்டத்தையும் பூரணமாக நிறைவேற்றியுள்ளது. பொருளாதார கல்வி விஷயங்களிலும் உத்தியோக வாய்ப்புக்களும் எமக்குத் தந்துவுகின்றது. ஆகவே நாம் எமது நன்றியை செலுத்தும்முகமாகவரும்பத்தாம் தேதி அரசாங்கத்தை ஆதரித்து ஊர்வலமும், பொதுக் கூட்டமும் நடத்த உங்களின் ஒத்துழைப்பைக் கோருகின்றோம்'

அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர்மகாசபையின் சாவகச்சேரிக்கிளைப்பொதுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில், நியமன எம். பி. யும் மகாசபைத் தலைவருமான திரு. எம். சி. சுப்பிரமணியம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாவற்குளி சரஸ்வதி சனசமூக நிலையம், கைதடி மேற்கு சரஸ்வதிநிலையம், நாவற்காடு இளங்கோ மன்றம், வரணி இடைக்குறிச்சி ச. ச. நிலையம் ஆகிய இடங்களில் நடைபெற்ற கூட்டங்களிலும் திரு எம் சி சுப்பிரமணியம் கலந்து உரையாற்றினார்.

வரணிவடக்கில், நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் ஆசிரியர் திரு. கே நடராசா மகாசபை பொதுச்செயலாளர் திரு பி. ஜே. அன்ரனி, திருவாளர்கள்ச. இரசையா வே. மார்க்கண்டு, சமாதான நீதவான் திரு க. தவசிப்பிள்ளை உட்படப் பலர்உரையாற்றினர்.

……

## புதிய ராணுவ முகாம்

அம்பன், சனி

நாகர்கோயில் கடற்கரையில் புதியகிளை முகாம் ஒன்றினை இராணுவத்தினர் நிறுவியுள்ளனர். இம்முகாமில் தங்கியிருக்கும் இராணுவத்தினர் கடற்கரையோரங்களில் ரோந்து புரிந்து வருகின்றனர்.

……

## மக்கள் கமிட்டி தெரிவு

உடுப்பிட்டி, சனி

அல்வாய்ப் பகுதியில் மக்கள் கமிட்டி ஒன்றை தெரிவு செய்வதற்கான வேலைகள் நடைபெறுகிறது. பதுக்கல்காரர்களைபிடிப்பதும், அங்கத்தவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்குமென ஆரம்பிக்கப்படும் இக்கமிட்டி 5-ம் திகதியளவில் இயங்கும் எனத்தெரியவருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நாட்டுக்கு உழைத்தவர்களை பாராட்டவேண்டும்'

உடும்பராய், சனி

"உடும்பராய் ஈன்றெடுத்த தவப்புதல்வர் திரு. வி. ரி. செல்லத்துரை உடும்பராய்க்கு மட்டுமன்றி ஈழத்துக்கே பெரும் பணிகளைப் புரிந்துள்ளார். அவரது சேவையைத் தொடர்ந்து அவரது குடும்பத்தார் சேவைசெய்ய முன்வந்தமை மிகவும் பாராட்டக்கூடியதே. இவரின் ஞாபகமாக செல்லத்துரை வீதி என்ற இப் புதிய வீதியை அழகுற அமைத்திருப்பது மிகவும் பாராட்டக்கூடிய செயலாகும். திரு. வி. ரி. செல்லத்துரையைப்போலத் தாம் பிறந்தநாட்டுக்கு தொண்டு புரிய எல்லோரும் முன்வரவேண்டும்"

உடும்பராயில் சென்ற வியாழன் மாலை நடைபெற்ற திரு. வே. த. செல்லத்துரைவீதித் திறப்பு விழாவிற் பேசிய கோப்பாய் எம். பி: திரு. சி. கதிரவேலுப்பிள்ளை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

முதலாம் வட்டார அங்கத்தவர் திரு. ந. அரியரத்தினம் தலைமையில் நடைபெற்ற இத்திறப்புவிழாவில் ஆசிரியர் திரு. அ. பஞ்சாட்சரம் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

"வீதியை திறந்துவைத்த உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. கே. நல்லைநாதன் பேசுகையில் 'நாம் ஒவ்வொருவரும் நாட்டு முன்னேற்றத்துக்கு உழைக்கவேண்டும். அரசாங்கம் எல்லாவற்றையும் செய்துதரும் என்று எதிர்பார்க்கக்கூடாது. உண்மைத் தொண்டை உரும்பராய்க்கு மட்டுமன்றி உலகுக்கே புரிந்த பெரியவர் திரு. வி. ரி. செல்லத்துரை ஞாபகமாக அன்னாரது குடும்பத்தாரின் செலவில் அமைக்கப்பட்ட அழகிய வீதியைத் திறந்துவைத்ததில் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்" என்றார்.

காரியாதிகாரி திரு. வ. கந்தப்பிள்ளை, பட்டினசபைத் தலைவர் திரு. க. பத்மராசா, க. குலசிங்கம், த. தம்பித்துரை, பண்டிதர் நீ. சி. முருகேசு உப்படப் பலர் திரு. வி. ரி. செல்லத்துரையின் வள்ளன்மையைப் பாராட்டிப் பேசினார்கள்.

திரு. அ. நல்லதம்பி நன்றிசெலுத்திப் பேசியதையடுத்து இசைநிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

உள்ளூராட்சி உதவிஆணையாளர், பாராளுமன்ற உறுப்பினர், காரியாதிகாரி உட்பட அனைவரும் உரும்பராய் சிதம்பரசுப்பிரமணிய கோயிலில் இருந்து ஊர்வலமாக விழாமண்டபத்துக்கு அழைத்துச்செல்லப்பட்டனர்.

# சொந்த நலன்களையே ஆசிரியர் சிந்திக்கின்றனர்!

## வடமாநில வித்தியாதிபதி கூறுகிறார்

பருத்தித்துறை, சனி

"பெருந்தொகையான ஆசிரியர் நாட்டின் கல்வி அபிவிருத்திபற்றிச் சிந்திக்காது, தமது சொந்த நலன்களையே முன்வைத்துச் சிந்திக்கின்றனர். இதன்விளைவாக கிளிநொச்சி, ஊர்காவற்றுறை பகுதிகளுக்குக்கூட இடம் மாறிச் செல்ல ஆசிரியர்கள் தயங்குகின்றனர். கிளிநொச்சிப்பகுதியில் பல பாடசாலைகள் மூடப்படும் தறுவாயிலுமுள்ளன. கிளிநொச்சிப் பகுதிக்கு ஆசிரியர் செல்ல முன்வந்தால் வடபகுதி கல்வித்துறை மேலும் முன்னேறலாம்".

இவ்வாறு கிளிநொச்சி, ஊர்காவற்றுறைப் பகுதிகளில் கடமையாற்ற முன்வந்த ஆசிரியர் பட்டியலை, ஸ்ரீலங்கா ஜாதிக குருசங்கம் வடகிளை சமர்ப்பித்தபோது வடமாநிலக் கல்வியதிபதி திரு டபிள்யு டி சி மகாதந்தில கூறினார். இப்பகுதிகளுக்கு சென்று கடமையாற்ற முன்வந்த ஆசிரியர்களைப் பாராட்டிய திரு மகாதந்தில அகில இலங்கை ரீதியாக இயங்கிவரும் ஸ்ரீ லங்கா ஜாதிக குருசங்கத்தை வாழ்த்தியதுடன் ஏனைய ஆசிரியர் தொழிற்சங்கங்களும் இச்சாதனையைப் பின்பற்றுவது வரவேற்கத்தக்கது என்றும் நம்பிக்கை தெரிவித்தார்.

வடபிரதேசக்கல்விப் பிரதம ஆலோசகரான திரு. ஏ. சந்திரசேகரம்பிள்ளை கூறியதாவது!

"ஆசிரியர் கூடிய சம்பளத்தையும், பதவியுயர்வையும் கருத்திற் கொள்ளாது, தேசியரீதியில் சிந்திக்க ஆரம்பித்துச் செயலாற்றினால், இந்நாட்டின் கல்விப் பிரச்னைகள் மட்டுமன்றி ஏனைய பல பிரச்னைகளுக்கும் தீர்வுகாணமுடியும். தமது சுகவாழ்வை ஒரு பொருட்டாக மதிக்காது நாட்டின் எப்பகுதியிலும் சேவையாற்றமுன்வந்த ஜாதிகருசங்க உறுப்பினரான ஆசிரியருக்கு நாட்டுமக்கள் கடமைப்பட்டுள்ளனர்."

ஜாதிக குருசங்க வடபகுதிக்கிளைச் செயலாளர் திரு எம் குமாரசாமியும் இவ்வாசிரியரைப் பாராட்டினார்.

## பிரதமர் விளக்கேற்றி ஆரம்பித்தார்!

கண்டி, சனி

பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலதா மாளிகையின் உட்பக்கத்திற்கு மின்சார விளக்கேற்றும் வைபவத்தை ஆரம்பித்து வைத்தார்.

மேற்குஜெர்மன் அரசாங்கத்தின் உதவியுடன் இது அமைக்கப்பட்டதாகும். வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தலதாமாளிகைக்கு இவ்வுதவி செய்ததையிட்டு மேற்குஜெர்மனியர் மகிழ்ச்சியடைவதாகவும், புத்ததர்மத்தின்மேல் ஆழ்ந்தபக்தியுணர்வும் நல்லெண்ணமும் கொண்டுள்ளார்கள் எனவும் மேற்குஜெர்மன் தூதரகம் தெரிவித்தது.

இவ்வைபவத்தில் பிரதமருடன் மேற்குஜெர்மன் தூதுவர் திரு. எவ். ஜே. கொவீமாறும் கலந்துகொண்டார்.

## சேர். ஜோனுக்கு இன்று 75!

கோட்டை, ஞாயிறு

முன்னாள் இலங்கைப் பிரதமர் சேர். ஜோன். கொத்தலாவல தனது 75-வது பிறந்த நாளை இன்றுகொண்டாடுகிறார். இவர் இப்போதும் மிகவும் 'குஷி'யாகவும் திடகாத்திரமாகவும் இருக்கிறார்.

## கொள்ளை

அட்டாளைச்சேனை, சனி

அட்டாளைச்சேனை முதலாம் குறிச்சியைச் சேர்ந்த புடவைக்கடையொன்றில் சுமார் நாலாயிரம் ரூபா பெறுமதியான ஜவுளி வகைகள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

## முல்லைத்தீவு மகாவித்தியாலய விளையாட்டுப்போட்டி

முல்லைத்தீவு, சனி

"இன்று நீங்கள் நடாத்திய விளையாட்டுப் போட்டியில் என்னைப் பிரதமவிருந்தினராகப் பங்குகொள்ளச் செய்தது எனக்கு பெருமகிழ்ச்சியைக் கொடுக்கின்றது. ஏனெனில் இன்று மகாவித்தியாலயமாக விளங்கும் பழைய பாடசாலையில்நான் என் ஆரம்பக்கல்வியைக் கற்றேன். அப்படிப்படித்த பாடசாலையின் போட்டியில் பிரதமவிருந்தினராகப்பங்கு கொண்டதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்."

இவ்வாறு முல்லைத்தீவு மகாவித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகப் பங்குபற்றியபோது வவனியா எம். பி. திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு கூறினார்.

விளையாட்டுப் போட்டியில் ஞானம் இல்லம் இவ்வருடச் சாம்பியனானது.

வெற்றி பெற்றோர்களுக்கு வவனியா எம். பி. யின் பாரியார் திருமதி வே. செல்லத்தம்பு பரிசில்களை வழங்கினார்.

முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் திரு. எஸ். முத்தையா நன்றி கூறினார். திரு. எவ். இராசேந்திரம் விளையாட்டுகளைத் திறம்பட நடாத்தினார்.

இரவு முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர் ஆசிரியர்கள் வவனியா எம். பி. திரு. எக்ஸ் எம். செல்லத்தம்புவுக்கும் பாரியாருக்கும் விருந்துபசாரம் அளித்தனர்.

கிரிக்கட்

## வெற்றி தோல்வியில்லை

காங்கேசன்துறை, சனி

காங்கேசன்துறை யங்றோயல் விளையாட்டுக் கழகத்திற்கும் தெல்லிப்பளை சூட்டிங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் காங்கேசன்துறைப் பட்டினசபைமைதானத்தில் நடைபெற்ற சிநேகபூர்வமான கிரிக்கட் போட்டி நேரம் போதாமையால் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. தெல்லிப்பளை சூட்டிங்ஸ்ரார் கோஷ்டி தமது முதலாட்டத்தில் 53 ஓட்டங்களையும் இரண்டாவது ஆட்டத்தில் நான்கு விக்கட் நஷ்டத்திற்கு 57 ஓட்டங்களையும் பெற்றது. யங்றோயல் கோஷ்டி முதல் ஆட்டத்தில் 70 ஓட்டங்களையும் இரண்டாவது ஆட்டத்தில் ஐந்து விக்கட் நஷ்டத்திற்கு 13 ஓட்டங்களையும் பெற்றது. யாங்றோயல் கோஷ்டியைச் சேர்ந்த கே. பத்மநாதன் 29 ஓட்டங்களை எடுத்து பார்வையாளர்களின் பாராட்டைப் பெற்றார்.

## அரசாங்கம் உதவும்

அம்பன், சனி

இவ் வருடத்தில் இந்துமத அலுவல்களுக்கும் பாடபோதனைகளுக்கும் நிதி உதவி வழங்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

சாதி வேற்றுமையின்றி சகல பிள்ளைகளும் அனுமதிக்கப்படும். இந்து மத போதனைப் பாடசாலைகள்.

சாதி வேற்றுமையின்றி சகலரும் பங்கு பெறும் இந்துமதஅலுவல்கள் ஆகிய இரு விடயங்களுக்கு மாத்திரம் இந்த உதவி வழங்கப்படும்.

மேற்படி இரு விடயங்களையும் பொறுப்பேற்று நடாத்தும் சங்கங்கள் ஏனைய பொது ஸ்தாபனங்களுடன் விண்ணப்பித்துமேற்படி நிதி உதவியைப் பெற்றுக்கொள்ளலாம்...

# மென்பந்து கிரிக்கெட்: றேயலுக்கு வெற்றி

காங்கேசன்துறை, சனி

காங்கேசன்துறை யங்றோயல் விளையாட்டுக் கழகத்திற்கும் தையிட்டி 'வொன்றெஸ்ற்' விளையாட்டுக் கழகத்திற்குமிடையில் காங்கேசன்துறைப் பட்டினசபைத் திடலில்நடைபெற்ற சிநேகபூர்வமான ஒருநாள் மென்பந்து கிரிக்கட் போட்டியில் யங்றோயல் விளையாட்டுக் கழகம் 9 விக்கட்டுகளால் வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய "வொன்றெஸ்ட்" கழகம் தமது முதலாட்டத்தில் 54 ஓட்டங்களையும் இரண்டாவது ஆட்டத்தில் 72 ஓட்டங்களையும் பெற்றனர். யங்றோயல் கோஷ்டி தனது முதலாட்டத்தில் 90 ஓட்டங்களையும் இரண்டாவது ஆட்டத்தில் எந்த விக்கட்டையும் இழக்காமல் 42 ஓட்டங்களையும்பெற்றது யங்றோயல் கோஷ்டியைச் சேர்ந்த எஸ். யோகராசா முதலாட்டத்தில் 38 ஓட்டங்களையும் இரண்டாவது ஆட்டத்தில் 25 ஓட்டங்களையும் பெற்று பார்வையாளரின் பாராட்டிற்குள்ளானார்.

# 24 வயதுப் பெண் வறுமையினால் தற்கொலை

மாவிட்டபுரம், சனி

வறுமையினால் மனமுடைந்த 24 வயது யுவதி ஒருவர் தற்கொலை செய்த சம்பவம் ஒன்று காங்கேசன்துறையில் நேற்று நடைபெற்றது.

காங்கேசன்துறையைச் சேர்ந்த 24 வயதுடைய செல்லையா லட்சுமி என்பவரே நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டவராவர்.

பிரஸ்தாப பெண்ணின் மரணம் குறித்து காங்கேசன்துறைப்பகுதி மரண விசாரணை அதிகாரி திரு அ. குமரகுரு விசாரணை நடத்தினார்.

விசாரணையின்போது பிரஸ்தாப பெண்ணினால் எழுதப்பட்ட உருக்கமான கடிதம் சமர்ப்பிக்கப்பட்டது.

"எமது குடும்பம் வறுமையானது. இக்குடும்பத்தில் 4 பெண்களும் 2 ஆண்களும் வாழ்கிறோம். உழைக்கக் கூடிய நிலையில் ஒருவர்தான் வாழ்கிறார். இப்படியான வறுமையான குடும்பத்தில் நானும் பாரமாக இருக்க விரும்பாமல் தற்கொலை செய்கிறேன். இதில் யார் மீதும் சந்தேகிக்கத் தேவையில்லை" என்று அக்கடிதத்தில் கூறப்பட்டிருந்தது.

இம்மரணம் குறித்துப் பெண்ணினது சகோதரர்களான கந்தசாமி, நடராசா ஆகியோரும் சகோதரி பத்மாவதியும் சாட்சியம் அளித்தனர்.

இதையடுத்து மரண விசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

சாட்சிகளை காங்கேசன்துறை பொலிஸ் சார்ஜன்ட் எம். தம்பையா ஆஜர் செய்தார்.

# டிராக்டர் குடை சாய்ந்தது: சாரதி மாண்டார்!

முல்லைத்தீவு, சனி

நெல்மூட்டைகளை டிராக்டரில் ஏற்றிக்கொண்டு சென்று இறக்கிவிட்டுத் திரும்புகையில் விபத்துக்குள்ளாகி டிராக்டர் சாரதி துடிதுடித்து மாண்டார்.

ஒதியமலையிலிருந்து நெடுங்கேணி நெற்களஞ்சியத்துக்கு நெல்மூடைகளை இறக்கிவிட்டுத் திரும்பிவருகையிலேயே இந்தக் கோர விபத்து நடந்தது.

நெடுங்கேணியைச்சேர்ந்த கராச் ஒன்றின் சொந்தக்காரரும், மெக்கானிக்குமான ஜோர்ஜ் பர்சசர் என்ற 35 வயது நபரே இப்பரிதாப மரணத்துக்குள்ளானவராவர்.

பிரதான வீதிக்கு அருகாமையிலுள்ள பாலமொன்றில் டிராக்டர் மோதியபோது, டிராக்டர் குடை சாய்ந்தது. சாரதி தூக்கி வீசப்பட்டார்.

முல்லைத்தீவு பதில் மேலதிக நீதிபதி திரு. இ. வ. விவேராசா விசாரணை நடத்தினார். விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## குற்றங்களை தடுக்க தலைவர் தெரிவு

உடுப்பிட்டி, சனி

பருத்தித்துறைப்பொலிஸ் அதிபர் ஒவ்வொரு கிராமத்திற்கும் மூன்று குற்றத் தடுப்பு இயக்கத்தலைவர்களைத் தெரிந்து கிராம சேவகர் மூலம் பொலிஸ் நிலையத்தில் அவர்களை பதிவு செய்துள்ளார்.

இவர்கள் பொலிசாருக்கு உதவிசெய்து ஊரில் குற்றங்களைத் தடை செய்யும் பொருட்டு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கட்கும் பயிற்சிபெற மாதம் ஒரு முறை வகுப்பு நடத்தப்படுமெனத் தெரியவருகிறது.

## கொல்வினுக்கு பதில் இவர்கள்

கோட்டை, சனி

டாக்டர் கொல்வின் ஆர். டி' சில்வா தற்போது ரோமில் நடக்கும் தேயிலை சம்பந்தமான மகாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருப்பதால் அவர் வகித்த அரசியல் அலுவல் அமைச்சின் பதில் அமைச்சராக வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி இலங்கரத்தின நியமிக்கப்பட்டுள்ளார்.

தோட்டத்தொழில் அமைச்சின் ஆட்சிமன்றக் காரியதரிசி திரு. அல்பேட் காரியவசம் பதில் தோட்டத்தொழில் அமைச்சராகத் கொல்வின் ஆர். டி. சில்வா வரும் வரையும் கடமையாற்றுவார்.

## அத்தியாவசிய சேவை

கோட்டை, சனி

இலங்கை பெட்ரோலியம் கூட்டுத்தாபன வேலைகள் அவசரகால சட்டத்தில் கீழ் இன்றுமுதல் அத்தியாவசிய சேவையென அறிவிக்கப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக உத்தரவொன்றை கவர்னர் ஜெனரல் திரு. வில்லியம் கோபல்லவா பிறப்பித்தார்.

...ப் பத்திரங்களை கலாசாரப் பகுதி அதிபர் கலாசார இணைக்களம் கொழும்பு -3 என்ற விலாசத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாடு சட்ட சபையில் கி. பாக். மக்களுக்கு அனுதாபம்

## கருணாநிதியின் தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது

சென்னை, ஏப். 3

கிழக்குப் பாகிஸ்தானில் விடுதலை கோரி நிற்கும் மக்கள் அடக்கி ஒடுக்கப்படுவது குறித்து தமிழ்நாடு சட்டசபை கவலைதெரிவித்துள்ளது.

வங்காள தேசமக்கள் தேர்தல் மூலம் அளித்த தீர்ப்பை நடைமுறைப் படுத்த முயன்ற தலைவர்கள் பழிவாங்கப்படுவதைக் கண்டு உலகமே அதிர்ச்சியடைந்துள்ளது என்று தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு கருணாநிதி கூறினுர்.

கிழக்குப்பாகிஸ்தான் மக்களின் போராட்டங்களுக்கு ஆதரவும் அனுதாபமும் தெரிவிக்கும் தீர்மானத்தை தமிழ்நாடு சட்டப்பேரவையில் சமர்ப்பித்து திரு. மு. கருணாநிதி பேசினுர்.

கிழக்குப்பாகிஸ்தான் மக்களுக்கு தமிழ்நாட்டுமக்களின் நல்லெண்ணத்தை தெரிவிக்கும் அதேசமயம் அவர்களின் போராட்டம் வெற்றிபெறவேண்டும் என்றும் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. தீர்மானம் ஒருமனதாகநிறைவேறியது

டாக்காவிலும் இதர பெரிய நகரங்களிலும் அமைதிதிருப்பிக்கொண்டிருப்பதாகவும் பாகிஸ்தான் வானெலி அறிவித்துள்ளது. ஆனல் டாக்காவில் ராணுவ அதிகாரிகள் இரவில் ஊரடங்குச்சட்டத்தை அமுலாக்கியிருப்பதாக பின்னர் அதே வானெலி கூறியது.

சில நகர்களில் விஷமிகள் அமைதியாக இருக்கும் மக்களைத் தூண்டிவிடுகிருர்கள் என்று பாகிஸ்தான் வானெலி தெரிவித்தது.

---

அச்சுவேலி

## கைத்தொழில் பேட்டையில் பட்டதாரிகளுக்கு வேலை

யாழ்ப்பாணம். ஞாயிறு

'அச்சுவேலியில் நிறுவப்படும் கைத்தொழில் பேட்டையில் படித்தவாலிபர்களுக்கும் வேலையற்றபட்டதாரிகளுக்கும் வேலைவழங்கப்படும்'.

கைத்தொழில்அபிவிருத்தி சபை விசாரணைக்குழு உறுப்பினரான கலாநிதி கோபாலபிள்ளை மகாதேவ நேற்று தெரிவித்தார்.

கலாநிதி மகாதேவா மேலும் கூறியதாவது:-

கைத்தொழில் பேட்டையில் நிறுவப்படும் தொழிற்சாலைகளில் படித்தவாலிபர்களுக்கும் பட்டதாரிகளுக்கும் வேலைவழங்க தொழில் அதிபர்கள் சம்மதித்துள்ளனர்.

வடபகுதியில் அதிகம் விற்பனையாகும் பொருட்களை இங்கேயே உற்பத்திசெய்யமுயற்சி எடுக்கப்படும்அத்துடன் வடபகுதியில் கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு என்னென்ன பொருட்களைக் உற்பத்திசெய்யலாமோ அவற்றையெல்லாம் இங்கு உற்பத்தி செய்ய முயற்சி எடுப்போம்

---

## யாழ்தேவி பிரயாணிகளுக்கு புதிய பஸ் சேவை

யாழ்ப்பாணம், ஞாயிறு

சுன்னுகம் புகையிரதநிலையத்திற்கும் கீரிமலைக்குமிடையில் புதிய பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. யாழ்தேவி புகைவண்டி பிரயாணிகளின் வசதிக்காகவே இப்புதிய பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கீரிமலையிலிருந்து காலை 4-45 மணிக்கு இந்த பஸ் புறப்பட்டு 764 இலக்க பாதைவழியாக சுன்னுகம் புகையிரத நிலையத்தைகாலை 5-35 மணிக்கு வந்தடையும்.

சுன்னுகம் புகையிரதநிலையத்திலிருந்து இரவு 10-15 மணிக்குஇந்த பஸ் புறப்பட்டு 764 இலக்க பாதையினுல் புன்னலைகட்டுவன் வசாவிளான் பலாலி வீதி வழியாக கீரிமலைக்குபோய்ச் சேரும்.

மயிலிட்டி பலாலி, வசாவிளான் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையை ஏற்று இலங்கைப் போக்குவரத்துச்சபைஇப் புதிய சேவையை ஆரம்பித்துள்ளது.

---

## நாசகார சக்திகள் மீது தொடர்ந்து வேட்டை

கோட்டை, சனி

நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தும் நாசகாரசக்திகளை ஒடுக்குவதற்கு அரசாங்கம் தொடர்ந்து நடவடிக்கை எடுத்துவருகிறது. கடந்தமூன்றுவாரகாலங்களில் அநேக சந்தேகப் பேர்வழிகள் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் ஏராளமான கைக்குண்டுகளும் வெடிமருந்துகளும்கூடக்கைப்பற்றப்பட்டுள்ளன.

கண்டியில் பேராதனைப் பல்கலைக்கழக ராமநாதன் மண்டபத்தைச் சேர்ந்த 4 மாணவிகள் கடந்தவாரம் விசாரணைக்குட் படுத்தப்பட்டார்கள். இங்குசில யூனிபாரங்களும் புரட்சிகர இலக்கியங்களும்காணப்பட்டதைத் தொடர்ந்தே இவர்கள்மீது விசாரணை நடத்தப்பட்டது. முன்பும் ஒரு ,வெடிகுண்டு சம்பவத்தையொட்டி இதே மாணவிகளும் வேறுசிலரும் பொலிசாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

கம்பஹாவில் ரதவாண என்ற இடத்தில் பொலிசார் திடீர்விசாரணை நடத்திக் கைக்குண்டு தயாரிக்கும் பல பொருட்களைக் கைப்பற்றியிருக்கின்றனர். ஏற்கனவே கைது செய்யப்பட்ட மூன்று நபர்களையும்கம்பளை நீதிமன்றத்தில் பொலிசார் ஆஜர் செய்தபோது நீதிபதி அவர்களை இம்மாதம் 5ம் திகதி வரை றிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

கலகிஎசயில் நாசகார இயக்கத்தைச் சேர்ந்தவர்களெனக் கருதப்படும் இரு வாலிபர்களைப் பொலிசார் கொழும்பு தெற்கு மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தனர், அவர்களிருவரையும் தலா 750ரூபா பிணையில் செல்ல மாஜிஸ்திரேட் அனுமதித்தார்.

நாவலப்பிட்டியில் வெடிவாயுவும் பெட்ரோலும் நிரப்பட்ட சுமார் நூறு பழைய பல்புகளை பொலிசார் கைப்பற்றினுர்கள் அதே இடத்தில் 20 எறிகுண்டுகளையும் கண்டெடுத்தனர் இதுவரை இங்கு 20 பேர் இது விஷயமாகச் சந்தேகத்தின் மீது கைதுசெய்யப்பட்டனர்,

அனுராதபுரத்தில் 15 யந்ரத்துப்பாக்கித் தோட்டாக்களையும் வேறுபல பொருட்களையும் பொலிசார் கைப்பற்றினர்,

---

இப் பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் கம்பனியாரால் யாழ்ப்பாணம் வைமன் வீதி நாவலர் றோட்டில் 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு ஏப்ரல்மாதம் 4-ந் உ அச்சிட்டுவெளியிடப்பட்டது.

---

## ஸ்ரீசிவபால...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர்களும் மௌனத்தை. மேற்கொள்வார்கள்.

இன்றைய உலகில் ஆன்மீகசாதனை மிக அவசியமானது இன்றைய மக்களின் அலைபாயும் உள்ளங்களுக்கு அமைதியைதரவல்லது அது. யோகியாரின் வருகை நிச்சயம் பக்தி மார்க்[illegible] மக்களிடையே தா[illegible]

யோகியாரைத் தரிசனம் செய்த அடியார்களுக்கு [illegible] ஸ்ரீசிவபால யோகியாரின் சீடர்களும் உதவிபுரிந்தனர்.

---

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

வல்வை வைத்தீஸ்வரன் கோவில் உற்சவத்தில் ஸ்ரீலஸ்ரீ ஸ்வாமிநாதத்தம்பிரான் சுவாமிகளது திருவிளையாடல் புராணவிரிவுரை நடைபெறும்.

0 0 0

இன்றுமாலை 5.10 மணிக்கு ஆதீனத்தில், பூஜைமுகத்தில் மலேசியா செல்லவிருக்கும் செஞ்சொற் செம்மணி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டிக்கு ஆசியும் பிரியாவிடையும் வழங்கப்படும்.

0 0

தாவடி, சனி

இன்று மாலை யாழ் வீரசிங்கம்மண்டபத்தில், பிரம்மஸ்ரீ என் சோமாஸ்கந்தசர்மாவின் மிருதங்க அரங்கேற்றம் நடைபெறுகிறது இவர் மிருதங்க வித்வான் திரு. எம் என் செல்லத்துரையின் மாணவனுவர்.

திரு சதா ஸ்ரீநிவாசன் தலைமையில் நடைபெறும் இவ் வைபவத்தில், அருட்கவி சி விநாசித்தம்பி, சுவாமிநாதத்தம்பிரான், ஆகியோர் ஆசியுரைவழங்குவர். இசை மன்னர் சித்தூர் சுப்பிரமணியம்பிள்ளை இசை விருந்தளிப்பார்.

---

## 450 பேர் கைது

கோட்டை, சனி

நாசகாரவேலைகளிலீடுபட்டதாக மேலும்40பேர்கைது செய்யப்பட்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை நாசவேலைகளிலீடுபட்டதாக கைது செய்யப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 450 ஆகும்.

---

## வேலைநிறுத்தம் முடிந்தது

கொழும்பு, சனி

இலங்கை சினிமா திரைப்படஸ்ருடியோ ஊழியர்களின் வேலை நிறுத்தம் முடிவடைந்ததும் சுமார் 15 சினிமா தியேட்டர்களில் நடைபெற்று வந்தவேலை நிறுத்தம் முடிவடைந்தது. வழக்கம் போல் இத்தியேட்டர்களில் காட்சிகள் நடைபெறும்.

---

## 'உப தேர்தலில் மீண்டும் போட்டியிடுவேன்'

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாண மாநகர சபையின் 1-ம் வட்டார உபதேர்தலில் தான் மீண்டும் போட்டியிடப் போவதாக திரு. ஏ. ஜி. இராஜசூரியர் நேற்று நமது நிருபரிடம் தெரிவித்தார்.

திரு. இராஜசூரியர்மேலும் கூறியதாவது:

மீண்டும் யாழ். மாநகர சபை 1-ம் வட்டாரத்தில் என்னைப் போட்டியிடுமாறு எனது ஆதரவாளர்கள் கோரியுள்ளனர்.

புலோற்பளை கிராமசபை உறுப்பினர் பதவியை ராஜினுமா செய்துவிட்டு மீண்டும் யாழ் மாநகரசபை 1-ம் வட்டார உபதேர்தலில் போட்டியிடுவேன்.

புலோற்பளை கிராமசபை உறுப்பினர் பதவியை ராஜினுமா செய்யாவிட்டால் மாநகரசபை 1ம் வட்டார உபதேர்தலில் எனது பாரியார் போட்டியிடுவார்.

---

ஆசிய அபிவிருத்தி வங்கி மகாநாடு

## நிதி அமைச்சர் என். எம். கலந்துகொள்வார்

கோட்டை, சனி

இம்மாதம் சிங்கப்பூரில் நடைபெறவிருக்கும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 4வது வருடாந்த மகாநாட்டில் கலந்துகொள்ள இலங்கையிலிருந்து செல்லும் தூதுக்குழுவுக்கு நிதியமைச்சர் கலாநிதி என், எம். பெரேரா தலைமைதாங்குவார்,

இம்மாநாடு இம்மாதம் 15-ம் திகதியிலிருந்து 17-ம் திகதிவரை நடைபெறவிருக்கிறது. நிதி அமைச்சர் இம் மாநாட்டின்போது இலங்கையில் அபிவிருத்தி வேலைகளுக்காக மேலு அதிகபணத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்வார் எனத் தெரிய வருகிறது.

இலங்கையில் செய்யப்படவிருக்கும் மூன்று பெரிய திட்டங்களான உடவளவைத்திட்டம், தேயிலைத் தொழிற்சாலைகளை நவீனமயமாக்குதல், கொழும்புத் துறைமுக அபிவிருத்தி போன்ற திட்டங்களுக்கு ஆசிய அபிவிருத்தி வங்கியிடம் மேலும் பணம்பெற அமைச்சர் முயற்சிசெய்வார்.

நிதியமைச்சருடன் திறைசேரியைச் சேர்ந்த சி, ஓ. கூரே குணதிலகா ஆகியோர் செல்வர்.

---

## இந்தோனேஷியா தலையிடாது

ஜகார்தா ஏப்ரல் 3

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நெருக்கடி தென் கிழக்காசியா தூரகிழக்குப்பிரச்னைகளைப்பாதிக்காதுஎன்று இந்தோனேஷிய அமைச்சர் திரு ஆதாம்மாலிக் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள நெருக்கடி உள்நாட்டுப் பிரச்னையாகும். எப்படிஇருந்தபோதிலும் பாகிஸ்தான் அதை விரைவில் தீர்த்துக்கொள்ளுமென நாம் நம்புகிருேம் இவ்விடயத்தில் வெளியார் தலையிடஇருக்ககூடாது பாகிஸ்தானில் பெரும்பகுதியினர் முஸ்லீம்களாகையாலும் அது உள்நாட்டுப் பிரச்னையாக இருப்பதாலும் இந்தோனேஷியா அதில்தலையிடமுடியாது என மேலும்அவர் தெரிவித்தார்

---

## வரி உயர்வுக்கு ஆட்சேபம்

கொழும்பு, சனி

கொழும்பு மாநகரசபை எல்லைக்குள் குறிப்பாக கறுவாத்தோட்டப்பகுதியில் உள்ள வீடுகளுக்கு வரிஉயர்த்தப்பட்டதை ஆயிரக்கணக்கான வரியிறுப்பாளர் ஆட்சேபித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org